ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

1465

1465
4-54
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
DEC 1956
MADRAS



JL
22ஊ211, N41S14
N55.14.12
142563

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	340
2.	ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]	344
3.	பாதூரில் அடியேனுடைய அநுபவம் [ஸ்ரீ. உப. காரைக்குறிச்சி, கோபால ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான்.]	346
4.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	348
5.	செய்திகள்	351
6.	திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]	355
7.	சுந்திரன் வந்தி பற்றும் செந்தமிழ்ப்பைங்கொடி [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	365
8.	ஸ்ரீ அழகியசிங்கர்களின் திருநக்ஷத்திரங்கள் [ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர், க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்.]	367
9.	மூலமந்த்ரஸித்த நாமார்ச்சநா	369

அட்டைப்பட விளக்கம்:–

இந்த ஸஞ்சிகையின் அட்டையில் வீக்ஷாரண்யமென்கிற புண்யாவர்த்தக்ஷேத்ரத்தில் விஜயகோடிவிமானமத்தியில் வேதாந்தங்களினால் தேடப்படுவனாயிருப்பினும் ஸகலமனிதர்களும் எப்பொழுதும் கண்டு வணங்கும்படியாக, வந்து ஸ்நானம் செய்பவர்களது மனத்தில் ஏற்பட்டுள்ள ஸமஸ்த தாபங்களையும் போக்கடிப்பதால் 'ஹ்ருத்தாபநாசினீ' என்ற பெயர் கொண்ட தடாகத்தின் வடகரையில் பாரிஜாதம் போன்றவராய் ஆச்ரிதர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் கொடுத்தருளுவதாக ஸங்கல்பித்துக் கோயில்கொண்டுள்ள 'ஸ்ரீ வீரராகவன்' அஞ்சேலென அபயமளித்துக்கொண்டு விளங்குகிறார்.

இவ்வெம்பெருமானுக்கு நாளது மன்மதவருஷ மார்கழிமீ 26வ முதல் ஆரம்பித்து தை ப்ரஹ்மோத்ஸவம் 10 தினங்கள் விசேஷமாக நடைபெறும். மார்கழிமீ 28வ அமாவாஸ்யையன்று கருடோத்ஸவமும், தைமீ 3வ திங்கட்கிழமை திருத்தேரும், தைமீ 5வ புதன்கிழமை தீர்த்தவாரியும் விசேஷதினங்களாகும். சில காலமாக தீர்த்தவசதியில்லாதிருந்த புஷ்கரிணியில் ஸ்ரீ எவ்வுள்கிடந்தானின் க்ருபாவிசேஷத்தினால் ஸ்ரீமதழகியசிங்கரது நியமனத்தின் பேரில் வெகு பிரயத்தினப்பட்டு தீர்த்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த கைங்கர்யத்தை ஸ்ரீநியமனப்படி ஸ்ரீ. குரிச்சி, லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியர் சிரமேற்கொண்டு செய்து வருகிறார். இன்னும் ஜலம் வந்துகொண்டிருக்கிறது.

[P. K. ராமபத்ரன்.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 | மன்மத ௵ மார்கழி ௴ | ஸஞ்சிகை 12

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 |
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 |
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 ஜீ𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ||

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 |
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஓர் ஸமூஹத்தின் முன்னேற்றம் அந்த ஸமூஹத்தினரில் கல்வி, அறிவுவளர்ச்சியைப் பொருத்ததாகும். அதனால்தான் நாட்டிலுள்ள

கல்வியும் அரசாங்கமும்

சிறுவர்களுக்குத்தகுந்த கல்வியை போதிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகிறது. 'இளமையிற் கல்' என்றபடி சிறுவயதில் கல்விப் பயனை அடைவதினால்தான் சிறுவர்கள் பிற்காலத்தில் தகுந்த பிரஜைகளாக ஆகின்றனர்.

சிறுவர்களுடைய மனோநிலைக்கேற்ப வாழ்க்கைக்கு உபயோகப்படும் முறையில் எவ்விதமான கல்வியை போதிக்கவேண்டும் என்பதில் நிபுணர்களுக்கும், ஸாமாந்ய அரசியல் வாதிகளுக்கும், பொதுஜனமாகிய பெற்றோர்களுக்கும், கருத்துவேற்றுமைகளுண்டு. ஜனநாயக அரசாட்சியில் பொதுஜனங்களுடைய அபிப்ராயத்துக்கு மாறுபட்ட கருத்துக்களை, (உண்மையாயினும்சரி, நாட்டின்நலனுக்குஅவசியமாயினும்சரி) நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிக்கும் பெரியோர்கள் எப்படி மதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை நாமெல்லோரும் நன்கு அறிவோம். ஸமீபகாலத்தில் ஆரம்பக்கல்விமுறையை பரிசீலிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டி தன் அறிக்கையை ஸமர்ப்பிவித்திருக்கிறது. அந்த அறிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதிலடங்கிய எல்லா அம்சங்களும் நன்கு பரிசீலிக்கப்பட்டபின் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும். இதுஸமயம் நாம் சில விஷயங்களைக் கூற விரும்புகிறோம்.

நமது ராஜ்யம் மிகவும் விஸ்தாரமுள்ளது. கல்விப்பயனை அடையவேண்டிய சிறுவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். சிறு கிராமங்கள்முதல் பள்ளிக்கூடவசதி ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் கஷ்டமான கார்யம். மத்ய அரசாங்கத்தின் உதவியைக்கொண்டு பள்ளிக்கூடவசதிகள் செய்து கொடுப்பதாக ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை கிராமங்களில் ஏற்படுத்த முயற்சித்து வருவதையும் நாம் அறிகிறோம். சட்டசபை கேள்வி நேரங்களில் மந்திரிகள் பதிலளிக்கையில்கூட இந்தவிதமான பள்ளிக்கூடங்கள் ஆசிரியர்களுக்கு வேலை தருவதென்ற கொள்கையை நிறைவேற்றுவதென்பது தெளிவானபோதிலும், கல்விவளர்ச்சி திருப்திகரமாக இல்லையென்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. பாடசாலை இன்ஸ்பெக்டரென்ற முறையில் அனுபவம் உள்ள எங்களைப்போன்றவர்கள் இவைகளிலுள்ள தோஷங்களை நன்கு அறிவார்கள். அரசாங்கத்துக்கும் ஏராளமான பணச்செலவு. அதற்காக புது வரிவிதிப்புக்கள் ஏற்படுகின்றன. ஆசிரியர்களுக்குத்தகுந்த தேர்ச்சி இல்லை. குறைவுள்ள மாணவர்களுக்குப் பள்ளிக்கூடவசதி ஏற்படுத்த இத்திட்டத்தின் கீழ்கூட முடிவதில்லை.

இம்மாதிரியான குறைகளுக்குப் பரிஹாரம் மிகவும் சுலபமாகக் காணமுடியும். அரசாங்கம் தங்களுடையது எனக்கருதும் சில ஸ்வாதந்த்ரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். தனி ஸ்தாபனங்களோ, தனிப்பட்டவர்களோ, கல்வி ஸ்தாபனங்களை தங்களுடைய நலனுக்கு ஏற்படுத்திக் கொள்ளலாம் என அனுமதித்தல் வேண்டும். அரசாங்க பரீக்ஷைக்கு இக்கல்வி

ஸ்தாபனங்களிலிருந்து பிள்ளைகள் அனுமதிக்கப்படவேண்டும். தேர்ச்சி பெற்றவர்களுக்கு சர்டிபிகேட்டுகள் வழங்கப்படுதல் வேண்டும். இம்முறையை, அரசாங்கம் பின்பற்றுமாகில் பள்ளிக்கூடவசதியின்மை என்ற குறையே இருக்காது. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஸௌகர்யமுண்டு. அரசாங்கத்திற்குச் செலவினம் குறையும். பள்ளிக்கூடநிர்மாணம் நிர்வாஹம், கண்காணிப்பு முதலிய விதங்களில் ஏற்படும் ஏராளசெலவை தனிப்பட்டவர்களும் தனிப்பட்ட ஸ்தாபனங்களும ஏற்றுக்கொண்டதாகும். இது ஒரு தகுந்த முறையும் எல்லோருடைய ஆதரவையும் பெற்றதாகும்.

நவீனகாலத்தில் குடிமைப் பயிற்சிபோன்ற பொதுப் பயிற்சிகள் பள்ளிக்கூடங்களில் ஏற்படுகின்றன என்றும் அதனுல் பயிற்சி ஸ்தலங்களாக கல்விஸ்தாபனங்கள் அவசியம் எனவும் சிலர் கூறுகின்றனர். இதையும் நாம் அறிவோம். ஆனுல் இவர்களின் வாதம் வீண்வாதமென்பதை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். தனிப்பட்டவர்களிடமும், தனிப்பட்டவர்களின் ஸ்தாபனங்களிலுள்ள மாணவர்களிடமும் இம்மாதிரியான பயிற்சியை நாம் பலவிடங்களிலும் நேரில் காண்கிறோம். ஆதலால் இம்மாதிரியான ஆக்ஷேபணை நிலை நிற்காது. அரசாங்க அங்கீகாரம் பெற்றவிடங்களிலும் அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும்தான் விசேஷமாகக்காணப்படும் குணம் இது என்று சொல்வதற்கில்லை. அந்தந்த ஸமூஹத்தினரின் ஊக்கத்தைப் பொருத்தது இம்மாதிரியான குணவிசேஷங்கள். ஆதலால் அரசாங்கத்தின் பளுவை பலவிதங்களிலும் குறைத்துக் கொள்ளவும், தனிப்பட்டவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும், அரசாங்கம் மேலே கூறிய முறையைக் கையாளவேணும்.

அதாவது தனிப்பட்ட ஸ்தாபனங்களினுல் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்களையும், என் தனிப்பட்ட நபர்களையும்கூட நேரிடையாகவே அரசாங்க பரீக்ஷைகளுக்கு அனுமதித்தல் மிகவும் அவசியம். அவைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அத்தாட்சிச்சீட்டுக்களோ பட்டங்களோ வழங்கவேண்டும். இதில் யாதொரு விதமான தடங்கலும் இருத்தல் கூடாது.

**　　**　　**　　**

திருப்பதி ஸம்ஸ்க்ருத விச்வ பரிஷத்

சென்ற மாதம் திருப்பதியில் நடந்த ஸம்ஸ்க்ருத விச்வபரிஷத் ஜனுதிபதியின் தலைமையில் கூடி பல உயர்ந்த நோக்குள்ள தீர்மானங்களை யெல்லாம் நிறைவேற்றியதென்னமோ உண்மைதான். ஆனுல் அவைகளின் பலன் தான் என்ன வென்பதை பொறுத்துத்தான் பார்க்கவேணும். மத்திய அரசாங்கமோ, அல்லது சில ராஜயங்களோ ஸம்ஸ்க்ருத அபிவ்ருத்தியைக் குறித்து சட்டங்கள் இயற்றலாம்; பணவுதவியும் கூட செய்ய முன் வரலாம்; ஆனுல் ஜன நாயக அரசாங்கத்தில் பொதுஜனங்களின் ஒத்துழைப்புத்தானே முக்கியம். அந்த ஆதரவு கிடைப்பதைப் பொருத்ததுதான் இந்த மொழி அபிவ்ருத்தி.

ஜனங்களின் ஆதரவு எப்பொழுது கிடைக்குமென்பதை யோசிக்குங்கால் கீழ் கண்ட விஷயங்கள் நமக்குக் கவலையைக் கொடுக்கின்றன. பொருளாதார அடிப்படையிலேதான் ஜனங்கள் தங்கள் ஒவ்வொரு கார்யத்தையும் அளந்து பார்க்க ஆரம்பித்துள்ளார்கள். பண வருவாய் இல்லாத விஷயங்களில் ஒருவருக்கும் ப்ரவேசமே ஏற்படுவதில்லை.

முற்காலத்தில் ஜனங்களுக்கு பொருளாதாரத்துரையில் இவ்வளவு பற்று இருந்தது கிடையாது. அதாவது கிடைத்ததைக் கொண்டு த்ருப்தி யடைந்தார்கள். ஆதலால் அவர்கள் உயர்நோக்குள்ள இலக்கியங்களிலும் சாஸ்த்ர ஆராய்ச்சிகளிலும் ஈடுபட வாரம்பித்தார்கள். அரசாங்கமும், தனவந்தர்களும் இம்முயற்சிகளை ஆதரித்து வந்தனர். நாளடைவில் இம்மாதிரியான பல அரசர்களும் மறைந்தார்கள். மிகுதியுள்ளவர்கள் பண்டை கலைகளை வளர்க்கும் ஆர்வமில்லாதவர்களாகவும் ஆனுர்கள். முடிவில் இம்மாதிரியான ஆராய்ச்சிகளே ஆதரவின்றி குறைந்துபோயிற்று.

நவீனகாலத்து அரசாங்கம் ஆராய்ச்சிகளுக்காதரவு அளிப்பது மிகவும் குறைவு. அதுவும்

ஸம்ஸ்க்ருத இயக்கியங்களின் அபிவ்ருத்திக் காகப் பாடுபடுவது ஸ்வல்பமே.

முன் கூறிய காரணங்களினால் ஸம்ஸ்க்ருத மொழிப்பயிற்சியே குறைய வாரம்பித்து விட்டது. ஜனங்களின் முற்போக்கு பழைய காலத்து முறையான ஆழ்ந்த படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆரம்பித்தது. விஜ்ஞான முன்னேற்றம் இவைகளுக்கெல்லாம் பெருந் தடையாக நிற்கிறது எனக் கூறலாம். ஆதலின் விஜ்ஞானமுன்னேற்றத்தை நாம் வெறுப்பதாகக் கொள்ளவேண்டாம். அத்துடன் கூடவே இலக்கியங்களின் ஆராய்ச்சியும் அதிகரிக்கவேண்டுமென்பதுதான் நமது அவா.

ஜனங்களுக்கு ஓர் உத்ஸாஹம் தோன்றும் படி அரசாங்கமும் முயலவேண்டும். சிறு பிள்ளைகளுக்கு இதில் ப்ரவேசத்தையும் உண்டாக்கவேண்டும்.

இந்த பரிஷத் கூடும் ஸமயம் இது ஸம்பந்தமாய் ஸ்ரீமதழகியசிங்கர் அனுக்ரஹித்திருந்த ஓர் ஸ்ரீமுகத்தில் இது விஷயத்தை நன்கு தெளிவு படுத்தியிருக்கிறது. (ஆங்கிலம் தமிழ்) தினசரி பத்ரிகைகளில் சென்ற மாதம் 20, 21 தேதிகளில் மேற்படி விஷயங்கள் ப்ரசுரமாகி இருக்கின்றன. நவீனகால கல்வி திட்டத்துடன் ஸம்ஸ்க்ருதபாஷாபோதனையையும் இணைத்து பிள்ளைகளுக்கு போதனை செய்யவேண்டும். அத்துடன் யூனிவர்ஸிடி, கவர்ன்மெண்ட் இவர்களால் நடத்தப்படும் பரீக்ஷைகளுக்கு இப்பிள்ளைகளை அநுமதிக்கவேண்டும். தனிப்பட்ட ஸ்தாபனங்களால் சரிவர பாடபோதனைகளை நடத்திவரும் கல்விஸ்தாபனங்களில் உள்ள பிள்ளைகளை நேரிடையாக மேற்படி பரீக்ஷைக்கு அநுமதிக்கவேணும். அதில் தேர்வு பெற்றவர்களுக்கு ஸர்டிபிகேட், பட்டம் இவைகளை வழங்கவேண்டும். இம்மாதிரி செய்வது ஸம்ஸ்க்ருத போதனைக்கு ஒரு ஊக்கமளிக்கும். இதைத்தான் ஸ்ரீமதழகியசிங்கர் வற்புறுத்தியுள்ளார்கள். தனிப்பட்ட மாணவனுக்குக்கூட இந்தச் சலுகையை அளிக்கலாம்.

தத்காலம் யூனிவர்ஸிடியாரால் நடத்தப்படும் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குத் தனிப்பட்ட மாணவர், வீட்டில் கல்விபயின்றவன் நேரிடையாக அநுமதிக்கப்படுகிறான். ஆனால் அவனுக்கு வயது பதினெட்டு பூர்த்தியாகி இருக்கவேண்டுமென நிர்ப்பந்த மிருக்கிறது. தகுதியுடைய எந்த மாணவனையும் அநுமதித்தல் வேண்டும். இதேபோல் கவர்ன்மெண்டாரால் நடத்தப்படும் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்கும் ஏன் தனிப்பட்ட மாணவர்களை யநுமதித்தல் கூடாதென்பதை யோசிக்க வேண்டும். பள்ளிக்கூடங்களில் உள்ள ஓர் பயிற்சி அவசியமென ஒருசாரார் கூறலாம். அவ்வித பயிற்சி வேறு முறைகளில் அடையமுடியாததன்று. அப்படியிருப்பினும் தனிப்பட்டோரால் நடத்தப்படும் கல்விச்சாலைகளில் இதைக் காட்டிலும் நல்லபயிற்சி ஏற்படுகிறதென்பதை மறுக்கமுடியாது.

முற்காலத்து திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கிடைத்த மொழி, கணிதம் முதலியவைகளின் பயிற்சி இக்காலத்தில் எவ்வித உயர்ந்த பள்ளிக்கூடத்திலும் கிடைக்கவில்லை என நிச்சயமாகக் கூறமுடியும். அரசாங்கமும் இது விஷயத்தை நன்கு யோசனை செய்து ஊக்கமுள்ளவர்களுக்கு உதவி யளித்தல் மிகவும் அவசியம்.

* * *

சில தினங்களுக்கு முன் சென்னை அரசாங்கம் மொழிக்கல்விச்சாலைகளுக்கு ஓர் சலுகை அளித்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. ஸம்ஸ்க்ருதம், தமிழ் முதலிய மொழிகளை முக்கியமாகக் கொண்டும், இதர மொழிகளையும் கணிதம் போன்ற பொது அறிவுப்பாடங்களையும் போதித்து வருவன சில கீழ்த்திசைக் கல்விச்சாலைகள். இவைகளை ஓரியண்டல் பாடசாலை எனக்கூறுவர். இவைகளில் இறுதிப் பரீக்ஷை அரசாங்கத்தாரால் நடத்தப்படுவது. இதுவரை இப்பரீக்ஷைக்கு கவர்ன்மெண்ட் என்ட்ரன்ஸ் பரீக்ஷை எனப்பெயர். இதை இனி ஓரியண்டல் ஹைஸ்கூல் பரீக்ஷை (ஓ. எஸ். எல். ஸி.) எனக் கூறுவர்கள். இந்த இறுதிப் பரீக்ஷையும் கவர்ன்மெண்டாரால் நடத்தப்படும். இதில் தேறியவர்கள் கவர்ன்மெண்ட் உத்யோகத்துக்கு தகுதியுள்ளவர்களென அர

சாங்கமறிவித்திருக்கிறது. இவர்களில் யூனிவர்ஸிடி கலாசாலையில் சேர்ந்து மேற்படிப்புக்கும் செல்லலாமெனவும் அநுமதியளிக்கப் பட்டிருக்கிறது. இப்பரீக்ஷைக்கு தத்காலமுள்ள நியதிப்படி தனிப்பட்ட மாணவர்க ளநுமதிக்கப்படுவர். இது ஒரு பெரியகார்யமெனவே நாமெண்ணுகிறோம். இதுவிஷயத்தில் நமக்கொரு கவலைமட்டில் உண்டு. அதாவது அரசாங்கம் எவ்வளவு ஆதரவு கொடுத்தாலும், படிப்பில் ஊக்கம் கொண்டுள்ளவர்கள் முன்னுக்கு வரவேணுமே. பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இம்மொழிப் பயிற்சியில் அக்கரை உண்டானால்தான் இம்மொழி வளர்ச்சி யடையும். பெற்றோர்களும், நமது ஸமூஹப்பிள்ளைகளும் இவ்விஷயத்தை நன்கு மனத்திற் கொள்ள வேண்டும்.

o^oo o^oo o^oo

திருப்பதியில் சென்ற மாதம் நடந்த ஸம்ஸ்க்ருத விச்வ பரிஷத்துக்கு ஸ்ரீமதழகியசிங்கர் அனுக்ரஹித்தருளிய ஸ்ரீமுகம்.

ஸம்ஸ்க்ருதவிச்வபரிஷத் தலைவரும் அதன் அபிவ்ருத்தியில் ஈடுபட்டிருக்கு மெல்லோரும் ஸம்ஸ்க்ருதாபிவ்ருத்தியிலெடுத்துவரும் முயற்சியைக் குறித்து நாம் மகிழ்ச்சி யடைகிறோம்.

முன் காலத்தில் ஸம்ஸ்க்ருதத்தின் மூலமாகவே இந்த புனித பாரததேசத்தில் எல்லா கல்விகளும், கலைகளும் வ்ருத்தியடைந்து வந்தன. வேதத்தை யநுஸரித்தே அதிலிருந்தே எல்லாக்கலைகளும் விருத்தியடைந்தன. வேதமும் ஸம்ஸ்க்ருதமாயிருப்பதினால்தான் நிலைத்திருக்கிறது.

ஒரு காலத்தில் அது 'பேசும் பாஷையாகவும் இருந்தது. ஆனால் தத்காலம் அம்மாதிரி நிலைமை உண்டாகுமென்றோ, உண்டாக்கிவிடலாமென்றோ நாம் நினைக்கலாமேயொழிய நடைமுறையில் சிந்திக்கக் கூடிய கார்யமன்று.

இப்பொழுது உலகம் எம்மாதிரிகல்வித்திட்டங்களையோ, படிப்புமுறைகளையோ விரும்பி வருகிறதோ அந்தவழியிலேயேநாமும்சென்று ஸம்ஸ்க்ருதத்தையும் அதிகமாக ஆதரிக்கும் படியான நிலையில் நாம் கொண்டுவரவேண்டும். தத்கால அரசியல் நிலையில் ஸம்ஸ்க்ருதத்தைக் கட்டாயமாகவும் செய்ய இயலாது. இவைகளை நன்கு பராமர்சித்தால் கீழ் கண்ட விஷயங்கள் நமக்கு உசிதமாகத் தோன்றுகின்றன.

யூனிவர்ஸிடியாரோ, கவர்ன்மெண்டாரோ நடத்தும் பரீக்ஷைகளுக்குத் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் பயிற்சிபெறும் மாணவர்களை அநுமதித்து, அவர்களும் பரீக்ஷைகளில் தேர்ச்சி பெறுவார்களாகில் அவர்களுக்கும் சர்டிபிகேட்களும், பட்டங்களும் வழங்குதல் வேண்டும். இம்முறையானது பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஸம்ஸ்க்ருதபாடங்களிலூக்கத்தை உண்டாக்கும்.

தனிப்பட்டவர்களையும் மேற்படி பரீக்ஷைகளுக்கெல்லாம் அநுமதிக்கலாம். வேண்டுமானால் இதற்காக ஏதாவது கட்டணம் வசூலித்துக்கொள்ளலாம். நல்லமுறையில் ஏற்பட்ட பாடங்களை படித்து பரீக்ஷைகளிலும் தேர்ச்சி பெறுகிறவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதில் யாதொரு ஆக்ஷேபணையும் கூறுவதற்கில்லை. கவர்ன்மெண்டாரோ, யூனிவர்ஸிடியாரோ இம்முறையை வேண்டுமானால் பரீக்ஷார்த்தமாகவும் நடத்திப் பார்க்கலாம். நிரந்தரமான ஏற்பாடாகவும் செய்யலாம்.

இம்முறையே ஸம்ஸ்க்ருத அபிவ்ருத்திக்கு மிகவும் உபகரிக்கும்.

அரசாங்கமும், ஸர்வகலாசாலைகளும் இந்த அம்சத்தை நன்கு கவனித்து ஆவன செய்வார்களென்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(14-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

மேலும்,

ஸுஹ்ருதஸ்ஸுவாதீநாஸ் ஸுக்ருதபலம் யஸ்ய க்ருத்யா வஸித்ர்யது: । துஷ்க்ருதபலம் த்விஷந்த: ப்ராரப்தாந்தே பரம் பதம் விசந்த: ச்ருதி ‚தஸ்ய புத்ரா தாயமுபயந்தி, ஸுஹ்ருதஸ்ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்' என்று கூறியதில், புத்ரர்கள் இவரது தனத்தை யடைவதைப் பற்றி இங்கே பேச வேண்டியதில்லை. பேசுவதும் உசிதமல்ல. அது எல்லாருடைய புத்ரர்களுக்கும் கிடைப்பதே. ச்ருதி அதைச் சொன்னது த்ருஷ்டாந்தமாக; அபூர்வமாக அறியாததை அறிவித்ததல்ல. எப்படி புத்ரர்களுக்கு ‚தாயம்' வருவது நிச்சயமோ, அப்படியே ஸுஹ்ருத்துகளும் த்வேஷிகளும் இவரது புண்யபாபங்களுக்கு வார்ஸுகளென்கிற நிச்சயத்தைக் காட்டுவதிலும், புத்ரர்கள் இந்த ஜந்மார்ஜித த்ரவ்யாதிகளில் பாகம் பெறுகிறார்கள், ஸுஹ்ருத் த்வேஷிகளோ அநேக ஜந்மார்ஜித புண்ய பாபங்களில் பாகம் பெறுகிறார்கள் என்பதிலும் நோக்கு. ‘க்ருத்யா' என்பது ச்யேநயாக அபிசாரக்ருத்யையையும் சொல்லும். அது எப்படி குறிப்பாக சத்ருவைப் போய்ப் பிடித்துக்கொண்டு ஹிம்ஸிக்குமோ அப்படியே எங்கிருந்தாலும் அவர்களைப் போய்க் கட்டாயம் பிடித்துக்கொள்ளுமென்று வ்யஞ்ஜனம். ஸுஹ்ருத்துக்கள் விஷயத்தில் தப்பாமல் கட்டாயம் வந்தடைவதில் மட்டும் த்ருஷ்டாந்தம். முதல் ச்ருதிபதமான ‚ஸுஹ்ருத:' என்றதையே வைத்து ச்லோகம் தொடங்குகிறது. ‚தஸ்ய ஸுஹ்ருத:' ‚தஸ்ய ஸாதுக்ருத்யாம்' என்று ச்ருதியின் அந்வயம். ‚தவ' என்பதை நடுவே வைப்பதால் இரண்டும் கிடைக்கிறது. ‚உன்னிடத்தில் ஸௌஹார்த்தத்தை வைத்தவர்' என்று பொருள். ஸர்வ பூதஸுஹ்ருத்து இவர். ‚ஸுஹ்ருதாம் ப்ரியஹிதஸ்ய யஸ்ய ஸுஹ்ருத்வம் ஸர்வபூதாநாம் ஸந்தாநோ பவதி ஸுஹ்ருதாம் ஸமேதோऽவிஷ்ட:' என்ற அதிகாரி. தவ ஸுக்ருதபலம்— இவர் ஸுக்ருதங்களின் பலத்தைத் தான் அவர்களடைவது. இப்படியடைவதற்குக் காரணம் இவரிடம் அவர்கள் செய்த ஸௌஹார்தம். ‚ஸுஹ்ருத:' என்பது ஹேதுகர்பம். தத்வமுக்தாகலாபத்தில் ஜீவஸரம் 59—வது ச்லோகத்தில் ‚வித்யாநிஷ்டோபகாராத்ய நுக்ரஹஜ தத்துஷ்டத்ருஷ்டா யதே' என்று இது விளக்கப்பட்டது. ‚யஸ்ய க்ருத்யா வஸித்ர்யம்— ‚தத்ஸுக்ருததுஷ்க்ருதே விதுநுதே' ‚ஸாதுக்ருத்யாம்' என்கிற ச்ருதி ஸூத்ரங்களின் ஸூசநம். ‚ஸுஹ்ருதீநாஸ்' என்பது ஸூத்ரகாரர் கூறிய உபாயநத்தை ஸூசிக்கிறது. துஷ்க்ருதபலம்— பாபங்களின் பயனை, த்விஷந்த:— உம்மை த்வேஷிக்கின்றவர்கள், ஸுஹ்ருதீநாஸ்— அடைகிறார்கள். ‚நாதத்தே கஸ்யசித் பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு:' என்கிற கீதாச்லோகத்தில் ‚ஒருவர் பாபத்தையும் புண்யத்தையும் அவற்றின் பயன்களையும் மற்றொருவர் வாங்கிக்கொள்ள முடியாது' என்று பாஷ்யம், குழந்தைகளுக்குப் பாபப் பயனாக நோய் வந்தால் அதை நாம் வாங்கிக்கொண்டு அந்த நோயைக் குழந்தையை விட்டு விலக்கிவிட முடியாது. இங்கே பகவத்ஸங்கல்பத்தால் இந்த ஆச்சர்யமான தாயபாகப்பிரிவினை நடத்திவைக்கப்படுகிறது. ‘ஸுஹ்ருதீநாஸ்' என்று கீதாச்லோகத்தில் ஸுஹ்ருதே என்பதின் ஸூசநம். ப்ராரப்தாந்தே பரம் பதம் விசந்த:— ‚அநாரப்தகார்யே ஏவ து பூர்வே ததவதே:' ‚போகேந த்விதரே க்ஷபயித்வா ஸம்பத்யதே' என்கிற ஸூத்ரங்களும், ‘தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே

கூழ ஸம்வத்ஸ்ரு' என்கிற ச்ருதியும் ஸூசிக்கப்படுகின்றன. பயனைக் கொடுக்கத்தொடங்கிவிட்ட ப்ராரப்தகர்மங் கழிந்த பிறகு, வரம் வஷம் விஶுத:- 'விஶுதெ வ வரம் வஷம்' என்கிற கீதையின் ஸூசகம்.

புருஷன்— தேவனே! உம்முடைய அநுக்ரஹத்தால் கிடைக்கப்போகும் அரிய ஸ்திதியைத்தெரிந்து, கலிநீங்கிய என்னுடைய புத்தி ஸந்தோஷத்தால் நர்த்தநம் செய்கிறது. ஆயினும் இன்னும் மறுபிறப்பு இருக்குமோ என மனது ஶங்கிக்கிறது. (என் பாக்யம் எப்படி இருக்கிறதோ?) இப்பிறப்பிலேயே தான் மோக்ஷம் வருமோ, என்னுடைய ப்ராரப்தகர்மம் இப்பிறப்போடேயே கழிந்துபோகுமோ, இன்னும் சில பிறப்புக்களைக் கொடுத்து பிறகு தான் கழியுமோ தெரியவில்லை. பரமபதம் சென்றுவிட்டால் அநாவ்ருத்தியில்லையென்பதைத் தாங்கள் சொன்னதைத் தெரிந்துகொண்டு விட்டேன். அதாவது:—

விதமஸி வஷெ லக்ஷ்மீகாஂதம்
விஷ்ருவிஹஂதிகம்
ஸவிவஜிதஸம்வஷ்ராவி-
ஹுவதஹஜாக்ருதிஃ ।
ஸுாடிதவ்யதக்ஷிஸியு-
ரூணாஷகதஸஃ
ஹஜதி வரமஂ ஸாஂ ஹொமெ
நிவ்ருதிகயொஸிதமு ॥

தேவரீர் ஸாதித்ததை நன்கு தெரிந்துகொண்டேன். அதை நான் அநுவாதம் செய்கிறேன். 'தூதி தவண ஂ தமஸஃ வரஸாக' என்று ப்ரக்ருதிமண்டலத்தை தாண்டி அப்பாலுள்ள வைகுண்டலோகத்திற்குச் சென்றுவிட்டால் அங்கிருந்து திரும்பி ஆவ்ருத்தியும், மானிடம் முதலிய பிறப்புகளுமில்லை தான். இந்த தேஹம் விழுந்தவுடனே வைகுண்டலோக ப்ராப்தி வருமோ என்பதுதான் ஸந்தேஹம். இப்பொழுதே ப்ராரப்தம் கழிந்துவிட்டதோ என்பது ஸந்தேஹம். விதமஸி வஷெ- 'தமஸ்' என்பது ப்ரக்ருதி, ப்ரக்ருதிஸம்பந்தமற்ற அப்ராக்ருததிவ்யஸ்தானத்தில், தமோகுணமில்லாத சுத்தஸத்வமயமான லோகத்திலென்றும் பொருள். லக்ஷ்மீகாஂதம்- லக்ஷ்மியாலாசைப்படப்படுவவென்றதால் சுதீவஹொமூஸவம் கைமுத்யஸித்தமென்று வ்யாக்யாநம். விஷ்ருவிஹஂதிகம்- அத்யாச்சர்யமான நித்யவிபூதியின் ஆதிபத்யத்தோடும், லீலாவிபூதியோடும் கூடியவர். லீலாவிபூதியும் அவருக்கு ஶேஷமாக அநுகூலமாக போக்யமே. ஸம்வஷ்ர- அடைந்து, எப்படி அங்கேசேருவது? ஸவிவஜிதஃ- விபீஷணரை ஸசிவரான ஸுக்ரீவரைக்கொண்டு தருவித்தார். ஆதிவாஹிக கணங்களான ஸசிவர்களை மிக மர்யாதையாக அனுப்பி இவன் சரீரத்தைவிடுவதுமுதலேயே அழைத்துவரச் செய்கிறார். 'நெதா ஜநஸவ ஸீவஜவெஷ்ருதி' என்று சகுந்தலைக்கு துஷ்யந்தன் கூறியதை நினைக்கவேணும். ஸம்வஷ்ராவிஹுவதஹஜாக்ருதிஃ — கடைசி இரண்டு பாதங்களின திகரணங்களையும் இங்கு ஸூசிப்பது. 'ஸம்வஷ்ராவிஹாவஃ ஸெந' என்று நாலாம் பாதம் முதல் ஸூத்ரம். 'ஸெந' என்பதால் நிஜஸ்வரூபத்திற்குப் பூர்ணப்ரகாசம் மட்டுமே, தர்மபூதஜ்ஞானத்தின் நிரதிசயவிகாஸம் ஸ்வாபாவிகமானது இப்பொழுது ஆவிர்பவிக்கிறது என்றபடி. ஸுாடிதவ்யதக்ஷிஃ- அவனே உயிரானதால் அவனை விட்டுத் தனித்து நிற்கக்கூடாத சரீரமான விசேஷணமான தன்மை ப்ரத்யக்ஷத்ருஷ்டமாகிறது. 'அவிஹாமெந ஜ்ஷகவாக' என்று இரண்டாமதிகரணஸூத்ரம். 'ஜ்ஷகவாக' என்பது 'ஸுாடிம' என்று ஸூசிக்கப்படுகிறது. 'அவிஹாமெந' என்றதற்கு 'அவரக்ஷிஸ' என்று பொருள். பிரித்தால் நிலையே கிடையாது. 'மாயாவாஸகம்' என்று மூல ச்ருதியில் 'நிழலைப்போல' என்றிருப்பதை பட்டருதாஹரித்தார்.

(தொடரும்)

ஸ்ரீ:

பாதூரில் அடியேனுடைய அனுபவம்

ஸ்ரீ அழகியசிங்கர்பட்டாபிஷேகத்திலிருந்து முக்யமாய் ஸஞ்சாரம் ஆரம்பம் முதல் அநேகமாக கூடவே வந்துகொண்டு பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவித்துக் கொண்டிருக்கிறேன். சில காலம் துரத்ருஷ்டவசத்தால் இழக்கப்பட்ட பகவத்ஸேவை மீண்டும் ஸுக்ருதவிசேஷத்தால் கிடைத்தது. ஸ்ரீ அழகியசிங்கரும் ஆசார்யபுத்ரனென்றும் வயதானவனென்றும் அடியேனிடத்தில் விசேஷாபிமானத்துடனெழுந்தருளியாயிருக்கிறபடி. ஸ்ரீஸந்நிதியிலுள்ளவர்கள் எல்லோருமே அதையொட்டியே ப்ரீதர்களாயிருக்கிறார்கள். அடியேனுக்கு 36-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனிடம் பஞ்சஸம்ஸ்காரமாகி இருக்கிறது. 'श्रीनिधि योगिवर्यमनघं निर्बाधबोधोदयं' என்று தனியனில் சொல்லப்பட்ட மாஹாத்ம்யத்தை யுடைய அந்த ஸ்ரீ அழகியசிங்கரிடம் விசேஷபக்தியுள்ளவர்களாயும், அந்த அநுக்ரஹம் பெற்றவர்களாயுமுள்ள மூன்றுபேர்களும் க்ரமமாக 39, 40, 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தர்களானார்களென்று 41-வது பட்டம் நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிக்கும்படியாயிருக்கும். அந்த ஸ்ரீ அழகியசிங்கரைக் குறைதீர ஆராதிக்க வேணுமென்ற திருவுள்ளத்தினால்தான் அர்ச்சாரூபியான அந்த ஸ்ரீ அழகியசிங்கரை 43-வது பட்டம் ப்ராக்ருதம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு தன்னுடைய திருநாமத்தை வைக்கும்படி பண்ணி அந்தமுகமாக ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் மங்களாசாஸனம் மரியாதைகளும் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்தன்று பண்ணிவைத்து ஸ்வர்ண அழகியசிங்கரைத் தங்கமண்டபத்திலும் ஷை ஸ்ரீ அழகியசிங்கரையே (ஸ்வர்ண அழகியசிங்கரையே) ப்ரதானமாக ஆராதித்துத் தன்னடிச்சோதிக்கெழுந்தருளின அதே ஊரிலேயே அவரே முதல் முதலில் மங்களாசாஸனம் பண்ணும்படி நடத்திவைத்தாரென்று எண்ணும்படியிருக்கிறது.

பிள்ளைபாக்கம் ஸ்ரீ அழகியசிங்கர் தன்னடிச்சோதிக்கெழுந்தருளி ஒரு வருஷம் கழித்து இந்த ஸ்ரீ அழகியசிங்கர் அவதரித்திருப்பதுடன் அந்த திருநாமமும் இருப்பதால் 'भाष्यकारः पुनर्भूमौ भाष्यप्रवचनादरात्' என்கிறபடி 36-வது டட்டம் ஸ்ரீ அழகியசிங்கரை ஆராதிக்க ஆதரத்தாலே அவரேதான் அவதரித்திருக்கிறாரோ என்றுகூட அடியேன்போல் இருப்பவர்களுக்குத் தோன்றுகிறது. டோலோத்ஸவம் முதலியதுகளிலும் 36-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு மரியாதைகள் நடத்தினதையும் தினந்தோறும் பெருமாள் தளிகை அமுதுசெய்தானதும் திருநாராயணபுரத்தில் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ப்ருந்தாவனத்திற்கு தளிகை மேளவாத்யபிருதுகளுடன் போவதுபோல் இங்கும் அந்த ஸ்ரீ அழகியசிங்கர் ப்ருந்தாவனத்திற்குத் தளிகை கொண்டுபோய் அமுதுசெய்வித்ததையும் பார்த்தபோது அந்த எண்ணமே ஸ்திரமாயிற்று. இந்த ஸ்ரீ அழகியசிங்கர் திருத்தகப்பனாரின் ஜனகதாயாரின் தமக்கையின் பர்த்தாவாகப் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் எழுந்தருளியிருந்தார். அந்த ஸம்பந்தமும் இந்த பக்த்யதிசயத்திற்குக் காரணமாயிருக்கலாம். அடியேனுக்கு திருக்குடந்தை ஸ்ரீ அழகியசிங்கர் காலம் முதற்கொண்டு ஸ்ரீஸந்நிதியில் விசேஷ பழக்கமுண்டு. அந்த ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்தின்பேரில் மலையாளம் போய் யானை வாங்கிவந்தேன். முன்னிருந்த தாமோதரன் என்னும் யானை அதுதான். இந்த ஸ்ரீ அழகியசிங்கர் காலத்தில் இப்போது ஸஞ்சாரத்திலும்கூட காலம் தவறாமல் கார்யங்கள் நடக்கின்றன. அபிகமனகாலத்தில் திருப்பாவை ஸேவையாகி சாற்றுமுறையானதும் தீர்த்தம் சடாரி கோஷ்டியானதும் ஸ்ரீ அழகியசிங்கருமெழுந்தருளி ஒரு ப்ரச்நம் வேதபாராயணம் நடைபெறுகிறது. பிறகு ஸமாச்ரயண பரந்யாஸங்களானதும் காலக்ஷேபம் தவறாமல் நடந்ததும், உடனே நீராட்டமாகி மாத்யாஹ்னிகத்தையநுஷ்டித்து மங்களஹாரத்திக்குத் தவறாமல் 12 மணிக்கெழுந்தருளியாகிறது. மத்யாஹ்னம் காலக்ஷேபம் ஸாதித்தாகிறது. ஸாயங்காலம் நித்யாநுஸந்தானம், க்ரமபாராயணம் இதுகளையும், பெரிய திருமஞ்சனம் முதலியதுகளையும் இந்த ஸ்ரீ அழகியசிங்கர் தாமே கூட இருந்து நடத்துவதையும் கூட இருந்து அநுபவித்து வரும் அடியேனுக்கு இந்த வய: ப்ரயுக்தமான அசக்தி கொஞ்சமேனும் தட்டாததோடு 'वैकुण्ठवासेऽपि न मेऽभिलाषः' என்று ஒவ்வொரு ஸமயத்திலும் சொல்லும்படியிருக்கிறது. அடியேனுக்கு வந்த அனுபவம், உள்ளடங்காமலிதை எழுதுவதன் மூலமாக வெளிவந்தது.

ஸ்ரீ அஹோபிலமடம் **41**-வது பட்டம்
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோபயதீந்த்ரமஹாதேசிகன்
[திருநக்ஷத்ரம் மார்கழி பூரட்டாதி]

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

16-11-55ல் கப்பூர் வாஸிகள் மிகுந்த உத்ஸாஹத்துடன் ஆராதித்தார்கள். அன்று 34-வது பட்டம் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை முன்னிட்டு வேத ப்ரபந்த க்ரந்த பாராயணங்கள் துடங்கப்பட்டன. அன்று ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 6 மைலுள்ள விழுப்புரத்திற்கெழுந்தருளினர். வக்கீல் ஸ்ரீவெங்கடாங்காசாரியர், ஸ்ரீகோபாலாசாரியர், ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்கள் வெகுதூரத்திலிருந்தே எதிர்கொண்டழைத்து ஹநுமார்கோயில் தெரு சத்ரத்தில் எழுந்தருளப்பண்ணி விசேஷமாக ஆராதித்தார்கள். முன்னமேயே ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரத்திற்கு அவசியம் பாதூர் எழுந்தருளவேணுமென்று அவ்வூர் வாஸிகள் ப்ரார்த்தித்திருந்தபடியால் விழுப்புரத்திலிருந்து நேராக 19 மைலுள்ள பாதூருக்கன்று ராத்திரி எழுந்தருளியாயிற்று. பாதூருக்கு எழுந்தருளும் ஸமயம் பின்மாலை 4½ மணி ஆனபடியால் 'க்ஷ்ரு ஜெ ஸஹஸம் ஜநூ ஸூ ஹாதாவ ஜெ நிஶா' என்கிற ச்லோகத்தைச் சொல்லிக்கொண்டு பூர்ணகும்ப புரஸ்ஸரமாக எதிர்கொண்டழைத்தார்கள். பெருமாளும் ஸ்ரீமதழகியசிங்கரும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஐயங்காருடைய இரண்டு க்ரஹங்களில் எழுந்தருளியிருந்தார்கள். அன்று தர்மகர்த்தா ஸுந்தரம் அய்யங்கார் முதலிய அக்ரஹாரவாஸிகள் சேர்ந்து ஆராதித்தார்கள். நெடுந்தெருவில் எழுந்தருளியிருக்கும்போது ஸ்வர்ண அழகியசிங்கரின் டோலையை ரிபேர் செய்யக் கொடுக்கும் ஸமயத்தில் இந்த டோலை சங்கிலியுடன் ஆடும்படியும் அதற்கேற்றபடி தங்கமண்டபமும் இருந்தால் நன்றாயிருக்குமென்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்ததை வ்யாஜமாகக் கொண்டு குரிச்சி ஸ்ரீஸந்தானமய்யங்கார் ஷ்டி கைங்கர்யத்தைத் தானே செய்வதாயும், பெருமாள் கைங்கர்யத்திற்காக தான் உத்தேசித்திருக்கும் த்ரவ்யம் இந்த ரீதியில் உபயோகப்பட வேணுமென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸன்னிதியில் ப்ரார்த்தித்து, அந்த கைங்கர்யத்தைப் பண்ணி அந்த மண்டபத்திற்கு வேண்டிய பெட்டியுடன் அன்று காலை பாதூரில் கொண்டு ஸமர்ப்பித்தார். அன்று ஸாயங்காலம் அந்த ஸ்வர்ணமண்டபத்தை யானையின்மேல்வைத்து வீதிவலம் செய்து பெருமாள் ஸன்னிதிக்குக் கொண்டுபோகப்பட்டு ஸமர்ப்பிக்கப்பட்டது.

அம் மண்டபமானது வெண்கலத்தில் வார்த்து மேல் வெள்ளித்தகடு போட்டு அதன் மேல் தங்கரேக் தகடு இழைக்கப்பட்டிருக்கிறது. அதில் மூன்று கலசங்களுடனும் முன் பக்கம் கல்லிழைத்த திருமண் சங்கு சக்ரம் கருடனும் வெள்ளை பச்சை சிவப்புக் கல்கள் இழைத்த கடசல் பிடித்த ஸ்தம்பங்களுடனும் தங்கசங்கிலி தங்கடோலையுடனும் கூடின மண்டபம் நன்றாக இருந்தது. மறுநாள் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரத்தன்று ஸமர்ப்பிவிக்க வேணுமென்கிற அபிப்ராயமிருந்தபோதிலும் அன்று வெள்ளிக்கிழமையானபடியாலும் அன்றே பூராட நக்ஷத்ரம் வந்துவிட்டபடியாலும் ஸ்ரீ அழகியசிங்கர் பானகாராதன காலத்தில் ஸ்வர்ண அழகியசிங்கருக்கு அந்த மண்டபத்தை ஸமர்ப்பித்தாயிற்று.* எல்லோரும்

* அந்த தங்கமண்டபத்தில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது.

"ஶொஶா விஶோநஷு கூரூஶ்ரீஜா தஸஷ்தா நஷாவெஸந ஶூரொமிபூஜஸ்ய।
ஸ்ரீரஜூகாயபூாதூஜயொமிநெதஶூமிபூத்யாநூஸாஶா நக்ஷ்யதெ வூகஸவெ॥"

இந்த விமானமும் டோலையும் குரிச்சி ஸந்தானதாஸனால் தன் மோக்ஷாசார்யன் ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் நித்யாநுஸந்தாநார்த்தம் ஸமர்ப்பிவிக்கப்பட்டது.

ஸேவித்து ஆனந்தபரவச மடைந்தார்கள். மறுநாள் சனிக்கிழமை அங்கு ப்ருந்தாவனத்தில் எழுந்தருளியிருக்கும் 36-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹா தேசிகனை எழுந்தருளப்பண்ணி மங்களாசாஸனம் செய்வித்து மாலை பரியட்டம் அருளப்பாடு மரியாதையாகி 8ம் திருவாய்மொழி சாற்றுமுறையும் வேதபாராயண ப்ரபந்த க்ரந்தசாற்றுமுறையும் நடந்தது. ஸ்ரீ அழகிய சிங்கரும் பூர்வாசார்யர்களுடைய பாதுகைகளை ஆராதித்து பாதுகாதீர்த்தம் ஸ்வீகரித்துக் கொண்டாயிற்று. எல்லோருடைய ப்ரார்த்தனையின்பேரில் ஸ்ரீ அழகியசிங்கருடைய ஸ்ரீ பாததீர்த்தமும் ஸ்ரீ அழகியசிங்காரால் கோஷ்டிக்கு ஸாதிக்கப்பட்டது. அன்று ராத்திரி ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வானும் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரம குமாரருமான காரைக்குரிச்சி கோபால ரங்காசார்ய ஸ்வாமி தன் பௌத்ரன் டோலோத்ஸவம் செய்யவேணுமென்று தன் குமாரர்மூலம் ப்ரார்த்தித்ததை நடத்திவைத்தார். அன்றையதினமே மளிகை திருநாராயணய்யங்கார் கண்ணனுக்கு கருட.வாஹனத்தில் வாண வேடிக்கைகளுடன் வீதி உத்ஸவம் பண்ணி வைத்தார். பல ஊர் ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். அன்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் B.A. விசேஷ ததீயாராதனம் பண்ணிவைத்தார். மறுநாள் அத்திப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரம். வேத ப்ரபந்த க்ரந்த சாற்றுமுறையும் ஸம்பாவனையும் நடந்தது. ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் பாதுகாதீர்த்தமும் ஸாதித்தாயிற்று. அன்று ஸ்ரீ ஸௌந்தரராஜ அய்யங்கார் முதலியவர்கள் ததீயாராதனம்பண்ணிவைத்தார்கள். மத்யாஹ்னம் கோஷ்டிக்கு சந்தன தாம்பூலங்கள் நடந்த பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் கீழ்க்கண்டபடி ஸாதித்தாயிற்று. 'புராணாதிகளில் ஒவ்வொன்றுக்கும் சில காலம் வரையில் ஶாபம் முதலியதுகளால் ப்ரதிபந்தகம் இருந்து பின் ஒரு காலத்தில் அவை நீங்கி பழைய ரீதி வருவது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரியேதான் ஒவ்வொரு நிமித்தங்களை அநுஸரித்து நல்ல கார்யங்கள் நடந்துவருகின்றன. ஆகவே பகவத்ஸங்கல்பம் எந்தெந்த காலத்தில் யாரை வ்யாஜமாகக்கொண்டு எது நடைபெறவேணுமோ அப்படி நடத்திவைக்கிறது. நம்மால் ஒன்றுமில்லை. இது அநுபவத்தில் நன்றாகத் தெரிந்த விஷயம் என்று ஸாதித்து விட்டு இரண்டொரு உதாஹரணமும் ஸாதிக்கும்படியிருந்தது. நரஸிம்ஹபுரத்தில் வெகு நாளாக ஒன்றுமில்லாமலிருந்த கோயில் இப்போதுதான் ப்ரதிஷ்டை நடைபெரும்படி பகவத்ஸங்கல்பமிருந்ததென்றும், அதேமாதிரி தங்க மண்டப கைங்கர்யம் திருக்குடந்தையிலேயே ஸமர்ப்பிக்கவேணுமென்று ஸந்தானமய்யங்கார் நினைத்திருந்தும் ஸ்வர்ண அழகியசிங்கரையே ப்ரதானமாக ஆராத்யமாக வைத்துக்கொண்டு பாதூரில் தன்னடிச்சோதிக்கெழுந்தருளின ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் மங்களாசாஸனம் செய்யும்படி பூராடத்தன்று ஸமர்ப்பித்துக்கொண்டதை எடுத்துக் காட்டி ஷி ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் பூர்வாச்ரமத்தில், தன்னுடைய பூர்வாச்ரமத்தாருக்குள்ள தன்னுடைய பாந்தவ்யத்தைஸாதிக்கும்படியாயிருந்தது. அதனாலேயேதான் தன் ஜந்மநக்ஷத்ரத்தன்று அந்த அழகியசிங்கர் உகக்கும்படி ஸ்வர்ண அழகியசிங்கர் திருவுள்ளம்பற்றினார் என்றும் ஸாதிக்கும்படியாயிருந்தது. மறுநாள் திங்கட்கிழமை ஸ்ரீ வா. ராஜகோபாலாசாரியரும், அவர் தம்பி ஸ்ரீ திருமலையும் ஆராதித்தார்கள். அன்றிரவு ஊராரும் வெளியூர்வாஸிகளும் ப்ரார்தித்ததற்கிணங்க ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப்பல்லக்கிலும், பெருமாள் தங்கப்பல்லக்கிலுமெழுந்தருளி பட்டணப்ரவேசம் வெகு ஆச்சர்யமாக நடந்தது ஸ்ரீ சேஷாத்ரி அய்யங்கார் நடத்திவைத்தார். மறுதினம் ஊரார் பொதுவில் பெரியதிருமஞ்சநம் பண்ணிவைத்து ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 2 மைலுள்ள செங்குரிச்சிக்கு எழுந்தருளும்போது ஸ்ரீ பட்டாபியும் ஸ்ரீ திருமலையும் தங்கள் க்ருஹங்களில் வழிமண்டகப்படி நடத்திவைத்தார்கள். ஸம்பாவனை கோஷ்டிவிநியோகம் நடந்தது.

24—11—55 செங்குரிச்சியில் ஸ்ரீ வெங்கடராகவ அய்யங்கார், ஸ்ரீகோவிந்தாசாரியர் முதலியவர்கள் ஆராதித்தார்கள். அன்று டோலோத்ஸவமும் நடந்தது. அன்று இரவு புறப்பட்டு 18 மைல் தூரமுள்ள காவனூருக்கெழுந்தருளினர். 25-11-55ல் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்ரீவரத அய்யங்கார் மணியகாரர் முதலிய ஊர்வாஸிகளும், 26-11-55 தினம் பண்ருட்டி ஸ்ரீஸாரதி அய்யங்காரும் ஆராதித்தார்கள். அங்கு எழுந்தருளியிருந்த இரண்டு தினங்களும் மாத்யாஹ்னிக ஸ்நாநத்திற்குப் பெண்ணையாற்றிற்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர்வாஸிகள் ஹரிஜனங்களுள்பட தம்ஜாதி மரியாதையை மீறுதமுறையில் ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் அன்று ஸாயங்காலம் ஸேவிக்கவந்த ஜனத்தைக் கண்டு கிராப்பு முதலிய பிறநாட்டு பழக்கங்கள் தகாதவை என்றும், நம்நாட்டு வழக்கப்படியும் சாஸ்த்ரீயமுறைப்படியும் ஒவ்வொரு ஹிந்துவும் குடுமி வைத்துக்கொண்டு நெற்றியில் தமக்குரிய சிஹ்னத்தைத் தரித்து கடவுள் பக்தியுடன் நடந்துகொண்டு கடவுளைத் தொழுவது தான் முறையென்றும் ஸாதித்ததைக் கேட்ட அந்த ஜனங்களும், தாங்கள் இனி அப்படியே இருப்போமென்று கூறி ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்து ஸந்தோஷத்தோடு திரும்பினர்கள். அன்றிரவு புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள கிராமமெழுந்தருளியாயிற்று. அவ்வூரில் ஸ்ரீமான் புருஷோத்தம ரெட்டியாரும் அவர் தமயன் ஸ்ரீமான் வெங்கடராம ரெட்டியாருமாக ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி பூர்ணமாக ஆராதித்தார்கள். த்வாதசிக்கு பேரங்கியூர் எழுந்தருளவேணுமென்று அவ்வூரார்முன்னமேயே ப்ரார்த்தித்தபடி அன்றிரவு ஆராதனம்முடிந்ததும் 6 மைலுள்ள பேரங்கியூருக்கு எழுந்தருளியாயிற்று. 27-11-55ல் அவ்வூரார் ஆராதித்தார்கள். அன்று பெருமாள் தங்கமண்டபத்திலும் ஸ்வர்ண அழகியசிங்கர் புதியதாக ஸமர்ப்பித்த தங்கவிமானத்திலுமெழுந்தருளியிருந்தார்கள். மத்யாஹ்னம் 3 மணிக்கு பெருமாள் திருவோலக்கத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் கைசிக புராணத்தை ஸாதித்து ஶாஸ்த்ரீயமானதும் ஸம்ப்ரதாயமானதுமான விஷயங்களை எடுத்து ஸாதிக்க ஸுமார் 200 பேருக்குமேல்பட்ட சிஷ்யகோடிகள் கேட்டு அகமகிழ்ந்தார்கள். ராத்திரி தண்ணீர்பள்ளி ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். அங்குபொய்கைபாக்கம் அந்திலி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வராஹாசாரியர் தங்களூருக்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, அதற்கிணங்கி ஸ்ரீ அழகியசிங்கரும் ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள பொய்கைபாக்கம் எழுந்தருளினர். 28, 29-11-55 இரண்டு தினங்கள் அவர் தன் க்ருஹத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி பூர்ணமாக ஆராதித்தார். 28-11-55 ராத்திரி டோலோத்ஸவம் பண்ணி வைத்தார். சந்த்ரக்ரஹணத்திற்கு பொய்கைபாக்கம் ஏரிக்கு எழுந்தருளி நீராட்டம் செய்தருளியாயிற்று. க்ருத்திகை தீபோத்ஸவமும் அவ்விடமே நடந்தது. 29ல அவ்வூரில் ஸ்ரீ பி. கே. வரதாசாரியர் ஸஞ்சாரம் எழுந்தருளும்போது தன் க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி டோலோத்ஸவம் பண்ணி வைத்தார். சுத்தமண்டல ஸ்நாநமான பிறகு அவ்விடமிருந்து புறப்பட்டு பெரும்பாக்கம் ஸ்ரீக்ருஷ்ணமாசாரியர் ஸ்ரீவராஹஸாமி அய்யங்கார் முதலியவர்கள் மறுபடியும் தங்களூருக்கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்ததன் பேரில் பெரும்பாக்கம் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீக்ருஷ்ணமாசாரியர், முன்னே எழுந்தருளியபோது தான் ஊரிலில்லை என்கிற காரணத்தினல் ஸ்ரீ அழகியசிங்கரைத் தன்க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணியும், பெருமாளை வராஹஸாமி ஆய்யங்கார் க்ருஹத்திலெழுந்தருளப்பண்ணியும் ஊராரின் ஒத்தாசையுடன் ஆராதித்தார். பெரும்பாக்கம் எழுந்தருளியதுமுதல் விடாது மழைபெய்ததால் 4-12-55 வரை அவ்வூரிலேயே எழுந்தருளியிருந்தார். முன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன் காலத்தில் 3 வருஷத்துக்குமேலும், 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் காலத்தில் ஸங்கல்ப காலத்திலும் எழுந்தருளியிருந்ததைத் திருவுள்ளம் பற்றி இப்பவும் முன் நாலுநாளெழுந்

தருளியிருந்தது போராதென்று பெருமாள் மறுபடியும் மழை என்கிற வ்யாஜத்தினுல் 5 நாள் எழுந்தருளி யிருக்கிறுப்போலிருக்கிறது என்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிக்கும்படியிருந்தது. பெருமாள் உகந்து எழுந்தருளி யிருந்தபடியால் பிள்ளைபாக்கம் ஸ்ரீ அழகியசிங்கரும் அவ்வூரை தக்ஷிணஹோபிலமென்று ஸாதிக்கும்படியாயிருந்ததென்றும் ஸாதித்தாயிற்று. வியாழக்கிழமை ஊராரும் சனிக்கிழமை அவ்வூர் ஸ்ரீநரஸிம்ஹ அய்யங்காரும் ததீயாராதனம் பண்ணிவைத்தார்கள். மழை கொஞ்சம் விட்டிருந்தபடியால் அவ்வூரிலிருந்து புறப்பட்டு 10 மைலுள்ளபார்ப்பனப்பட்டுஎழுந்தருளியாயிற்று. அன்றிரவு புறப்பட்டு 18 மைல் தூரமுள்ள திண்டிவனமெழுந்தருளியாயிற்று. அவ்வூர் ஸ்ரீசேஷாசாரியர், ஸ்ரீநரஸிம்ஹாசாரியர், ஸ்ரீராமாசாரியர் முதலியவர்கள் 1 மைலிலிருந்தே ச்ரத்தையுடன் பூர்ணகும்பமரியாதைகளுடன் வரவேற்று 6–12–55ல் தசாவதார மண்டபம் கட்டி ஆராதித்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு 8 மைலுள்ள ஒலக்கூரெழுந்தருளியாயிற்று. ஒலக்கூரார் வெள்ளிமண்டப ஸம்பாவனை பண்ணி ஆராதித்தார்கள். முன் 41.வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஒலக்கூரில் எழுந்தருளி யிருக்கும்போது ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தி யன்று பூர்வாச்ரமத்தில் தாம் பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவிக்க வந்ததாயும், அப்போது ஸ்ரீ அழகியசிங்கர் தாமே கூப்பிட்டு அநுக்ரஹத்துடன் ப்ரேஷமந்த்ரத்தை உபதேசித்ததாயும், பெருகவாழ்ந்தான், திருப்பளாத்துறை, ஸ்ரீரங்கம் போல இந்த ஊரையும் மறக்காமல் தாம் நினைவில் கொள்ள வேண்டிய ஊர் என்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிக்கும்படி யிருந்தது. பெருகவாழ்ந்தான் ஸ்ரீரங்கம் காலக்ஷேபம் பண்ணினவிடம், திருப்பளாத்துறை பரஸமர்ப்பணம் செய்த இடம், ஒலக்கூர் மந்த்ரச்ரவணம் பண்ணியவிடம், திருவள்ளூர் ஆச்ரமம் ஸ்வீகரித்த இடமென்றும் ஸாதிக்கும்படியாயிருந்தது.

(தொடரும்)

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அஹோபில மடம் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

மாம்பலம்

மேல் மாம்பலம் ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலையில் *19–11–55* சனிக்கிழமையன்று மாலை 5 மணிக்கு ஸ்ரீ அஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது.

ஷ‌டி விழா ஸ்ரீ. உப. R. கேசவ ஐயங்கார் ஸ்வாமி (அட்வொகேட்) தலைமையில் அனேக பக்தகோடிகள் சூழ்ந்திருக்க, பள்ளிமாணவர்களின் ஸ்தோத்ரபாடத்துட னாரம்பமாகியது. அவ்வமயம் பள்ளியிலுள்ள ஏழை வித்யார்த்திகளுக்கு வஸ்த்ரங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீ. உப. S. ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமி ஸ்வாகதம் சொல்லி அனைவருக்கும் வரவேற்பு கூறினர். பின்னர் தலைவர் தமது முன்னுரையில் ஆசார்ய ஜயந்தியின் ஆவச்யகதையையும் மஹிமையையும் விவரித்துக் கூறினர். அவர் மேலும் 'தத்காலம் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கரின் குணதிசயங்களையும், ஆசார்ய ஜயந்தி கொண்டாடுவதற்கு முக்யத்வ முண்டென்பதையும், முன்னோர் செய்யும் வகையையே பின்பற்றவேண்டுமென்பதையும் உபய பாஷையிலும் ப்ரமா

ஸ்ரீ அஹோபில மடம் **43**-வது பட்டம்

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன்

ணத்துடன் கூறினார். முடிவில் அருளுடன் கூடிய ஆசார்யனின் திருவடியே உத்தேச்யம் என்று நன்கு உபந்யஸித்தார்.

பின்னர் திருவையாறு கல்லூரி முன்னாள் பேராசிரியர் ஸ்ரீ. உப. மதுராந்தகம் வீரராகவாசார்யஸ்வாமி உபந்யஸித்தார். அவர் கூறியதாவது:— 'பகவானைவிட ஆசார்யர்களே சிறந்தவர்கள், அவர்கள் செய்த நன்றிக்கு ப்ரத்யுபகாரம் 'மாயனுங்காணகில்லா' னென்றும் அப்படிப்பட்ட வைராக்யமுள்ள ஆசார்யர்களின் பாதம் பணிவது நன்மையைத் தருமென்றும், அதைத்தான் ஆழ்வார்களும் கொண்டாடியிருக்கிறார்களென்றும் கூறினார். அவருக்குப் பின் திருக்குடந்தை ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி உபந்யஸித்தார். அவர் தமது உபந்யாஸத்தில் தான் ஸ்ரீ அழகிய சிங்கரின் குணாதிசயங்களை நேரில் அநுபவித்ததாயும், அப்படிப்பட்ட விரக்தாக்ரேஸரான ஸ்ரீ அழகியசிங்கரின் திருவடிகளை எல்லோருமடைய வேண்டுமென்றும், ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளிய கார்யங்களைப்பற்றியும் விரிவாக உபந்யஸித்தார். பிறகு ஸம்பாவனையாகி தலைமையாசிரியரால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு தாம்பூலம் வழங்கப்பட்டு விழா இனிது முடிவடைந்தது.

(ஷை பாடசாலையில் 'ஸ்ரீமாலோல ஸபை' என்று ஓர் ஸங்கம் 29–10–55ல் சுதேசமித்திரன் உதவியாசிரியர் ஸ்ரீ S. பாஷ்யம் (சாண்டில்யன்) அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டது. ஸ்ரீசாண்டில்யன் மாணவர்களுடைய கடமையைப்பற்றியும் பழைய குருகுலவாஸத்தின் மேன்மையைப்பற்றியுமுதாரணத்துடன் விளக்கியபிறகு வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது.)

ஐ. ஸ்ரீநிவாஸாசாரியர், தலைமையாசிரியர்,

ஸ்ரீரங்கம்

இவ்வூரிலும் கார்த்திகைப் பூராடத்தன்று ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலையில் கொண்டாடப்பட்டது.

அவ்வமயம் ஸ்ரீC.V. ராஜகோபாலாசாரியர் B.A.,L.T. வரவேற்புப் பேசுகையில் ஸ்ரீ அழகியசிங்கரின் உந்நத லக்ஷ்யங்களையும் ஆசாரத்துடன் படிப்பைப் போதிக்கச்செய்யுமேற்பாடுகளையும் குறிப்பிட்டு ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரத்தைக்கொண்டாடுவதாலும் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு தங்களாலான வரை உதவிபுரிவதாலும், ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரத்தைக்கொண்டாடுவதாலும் நாம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு க்ருதஜ்ஞதைக்காட்டினவர்களாவோமென்று சொன்னார். பிறகு C. V. விஜயராகவாசாரியர் M. A. ஸ்ரீ அழகிய சிங்கருடைய மதஸ்தாபனத்திலுள்ள ஆர்வத்தைப்பற்றியும், குணாதிசயங்களைப்பற்றியும் வெகு அழகாக உபந்யஸித்தார். பிறகு கோஷ்டிக்கு சந்தன தாம்பூல ப்ரஸாதங்கள் விநியோகிக்கப் பட்டது. பின்பு பொன்மலை ஸ்ரீராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் நன்றி கூறப்பட்டு உத்ஸவம் முடிவடைந்தது.

K. ஸ்ரீநிவாஸாசாரியர், ஹெட்மாஸ்டர்,

கும்பகோணம்

19-11-55 சனிக்கிழமை காலையில் காவேரியிலிருந்து திருமஞ்சன தீர்த்தம் ஸகலபிருதுகளுடன் கொண்டுவரப்பட்டு பெருமாள் முதலியவர்களுக்கு விசேஷமாகத் திருமஞ்சநம் பண்ணப்பட்டது. பிறகு ஸம்பாவனை, ஸ்ரீபாத தீர்த்தம் விசேஷ ததீயைகள் கோஷ்டி முதலியன நடந்தன. ஸ்ரீ P. S. ஆராவமுத ஐயங்காரும், பாத்திரக்கடை ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஐயங்காரும், மற்றுமுள்ள ப்ரமுகர்களும் சேர்ந்து சிறப்பாக நடத்திவைத்தார்கள். அன்று மாலையில் ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஊர் ப்ரமுகர்களும் சேர்ந்து ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுருவப் படத்தை வேதபாராயணம் வாத்யம் முதலியவைகளுடன் வீதிப்ரதக்ஷிணம் பண்ணிக்கொண்டு உத்ஸவத்தை சிறப்பாக நடத்தினார்கள்.

பிறகு மடத்தில் பாடசாலை தலைமையாசிரியர், ஸாரஸாரஜ்ஞ, சிரோமணி ஸ்ரீ P. M. சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி தலைமையின் கீழ் சிரோமணி ஸ்ரீ M. S. ராஜகோபாலாசாரியர், வில்லூர் ஆசுகவி ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர், B. H. School ஆசிரியர் புரிசை ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர், மன்னார்குடி சிரோமணி, ஸ்ரீராஜகோபாலாசாரியர் முதலியோர்கள் ஸ்ரீ அழகியசிங்கரின் வைபவத்தைப்பற்றி விசேஷமாக உபந்யஸித்தார்கள். அத்யக்ஷர் ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கரின் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யங்களையும், தத்காலம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலையின் நோக்கத்தையும் விரிவாக எடுத்துரைத்தார். பிறகு இப்படிப்பட்ட ஆசார்யர்கள் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி

யிருந்து சிஷ்யகோடிகளை உஜ்ஜீவிக்கும்படியாகச்செய்யவேண்டுமென்று ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸன்னிதியில் ப்ரார்த்தனையுடன் ஸபை தலைக்கட்டியது.

முத்ரகர்த்தா, ஸ்ரீஅஹோபிலமடம்.

காஞ்சீபுரம்

நாளது மன்மத ௵ கார்த்திகை ௴ 3௳ சனிக்கிழமைகாலை 7 மணிக்கு ஸ்ரீஅஹோபில மடம் பாடசாலை மாணவர்கள் யாவருக்கும் ஷை மடம் ஏஜண்டு M.V. ரங்காசாரியர்ஸ்வாமி தலைமையில் ஸ்ரீஸந்நிதி உதவியால் உத்தரீயங்கள் வாங்கி வழங்கப்பட்டன. பிறகு எல்லோருமவைகளை உடுத்திக்கொண்டார்கள். இவ்வூரிலுள்ள பல ப்ரமுகர்களும் சிஷ்யகோடிகளுமிவ்வுத்ஸவத்தில் கலந்துகொண்டார்கள், பிறகு ஆஸ்திகளனைவரும் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீஅழகியசிங்கர் திருவுருவப்படத்தை யானை குதிரை சத்ர சாமர வாத்யங்களுடனும், மாணவர்களின் ஸ்தோத்ரபாடகோஷ்டியுடனும் ஸ்ரீதேவப்பெருமாள் நான்கு மாட வீதிகளிலும் ஊர்வலமாக வந்து ஸ்ரீஅஹோபில மடத்தில் எழுந்தருளப்பண்ணினார்கள். பிறகு ஸ்ரீஅழகியசிங்கரின் குணாதிசயங்கள் உபந்யஸிக்கப்பட்டவுடன் ஸம்பாவனையும் தீர்த்தப்ரஸாத விநியோகங்களும் நடந்தன.

R. அண்ணா ஐயங்கார், தலைமையாசிரியர்.

வடுவூர்

இவ்வூரிலும் ஸ்ரீஅஹோபிலமடம்பாடசாலையில் ஸ்ரீஅழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. காலையில் திருமஞ்சனமும் கோஷ்டியும் நடந்தது. மாலையில் உபந்யாஸமும் நடந்தது.

A. K. நரஸிம்ஹாசாரியர்,
தலைமை ஆசிரியர்.

உத்திரன்மேரூர்

19–11–55 காலை 11 மணிக்கு பாடசாலைக் கட்டிடத்தில் ஸ்ரீஅழகிய சிங்கருடைய திருநக்ஷத்திரமஹோத்ஸவஸபை ஸ்ரீ. உப. U. C. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி தலைமையில் நடந்தது. வித்யார்த்திகள் ஸ்ரீந்ருஸிம்ஹ ஸ்தோத்ரத்தையும் ஸ்ரீஅழகியசிங்கரின் தனியனையும் ஸேவித்ததுடன் பலர் ஸ்ரீஅழகியசிங்கர் செய்தருளும் தர்மஸம்ஸ்தாபனத்தைப்பற்றி எடுத்துச்சொல்ல அனுபவிக்கப்பெற்றது. பிள்ளைகளின் வாசிப்பையும்பரீக்ஷித்துப்பின்பு தங்கள் த்ருப்தியையும் தெரிவித்தார்கள். பிறகு தனியனை ஸேவிக்க ஸபை முடிவு பெற்றது.

வாஸுதேவன்.

ஸ்ரீதில்லைஸ்தானம் ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவம், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி பிருதாலங்க்ருதராயெழுந்தருளியிருக்கும் தில்லைஸ்தானம் ஸ்ரீசடகோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனுடைய 84-வது வார்ஷிகமஹோத்ஸவம் ஸ்ரீரங்கத்தில் கார்த்திகை௴ 15௳ (*1-12-55*) வியாழக்கிழமை விசேஷ வைபத்துடன் நடைபெற்றது. இம்மஹோத்ஸவத்திற்கு பெங்களூர், மைஸூர், சென்னை முதலியபலவிடங்களிலிருந்து அநேக ஸ்ரீவைஷ்ணவர்களும் உள்ளூரிலிருந்தும் பல திருநாமங்களும் எழுந்தருயிருந்தனர். காலையில் அபிகமநாராதநாநந்தரம் பெருமாள் தீர்த்தம், ஸ்ரீபாததீர்த்தம் விநியோகமான பின்னர் பூர்வாசார்யர்களுடைய ஸம்பாவனையும், ஸ்ரீதசாவதார எம்பெருமான்களுடைய மங்களாசாஸநமும் நடைபெற்றன. பிறகு ஷட்ரஸோபேதமாக பாகவத ததீயாராதநம் நடந்தது. பின்பு இவ்வுத்ஸவத்தினங்கமாக ஸ்ரீஸ்வாமி விஷயமான அச்சிடப்பட்ட 'சதாபிஷேகமலர்' ஸ்ரீகோசத்தை பெங்களூர் வி. நாராயணய்யங்கார் ஸ்வாமி ஸப்ரணாமம் ஸ்ரீஸ்வாமியின் சரணாரவிந்தத்தில் ஸமர்ப்பித்தார். ஷை மலரில் ஸ்ரீஸ்வாமிவிஷயமாய்த்தாமெழுதிவெளியிட்ட 'ஆசார்யவைபவ' மென்னும் விஷயத்தை ஸ்ரீஸ்வாமி திருவடியும், சென்னை சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜ் ரிடையர்ட் தமிழாசிரியருமான ஸ்ரீ கோ. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி ஸேவித்துப்பொருளைப்பரக்க உபந்யஸித்தார். ச்ரோதாக்கள் அதைக் கேட்டு செவிபடைத்த பயன் பெற்றதாகக்கொண்டு களிப்பெய்தினர். பின்னர் மாலை 5 மணிக்கு பண்டிதஸம்பாவனைகளும் சந்தநதாம்பூலாதிகளும் வழங்கப்பட்டு உத்ஸவம் இனிது நிறைவேறியது. ஸ்ரீஸ்வாமிக்கு ஆநந்த ௵ புரட்டாசி ௴ ஸந்யாஸம். ஆகவே ஸ்ரீஸ்வாமி ஸந்யஸித்துக்கொண்டு 41 சாதுர்மாஸ்யங்களாயின. மிகுந்த திருமேனித்தளர்ச்சியுடன் ப்ரக்ருதம் ஸ்ரீரங்கம் ஸ்ரீதசாவதாரன் ஸன்னிதியில் எழுந்தருளியிருக்கிறார்.

மாடபூசி கிருஷ்ணதாஸன், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(14-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

உன்தன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது. உன்னோடு உறவு, புந்துத்வம், எங்களுக்கிருக்கின்றது. உன்னுடைய உறவினர் நாங்கள். இந்த உறவு ஒருவருக்கொருவர் ஸந்தித்தபோது உண்டாகி பிரிந்தபோது விலகக்கூடியதாய் தாத்காலிகமானஉறவன்று. இயற்கையாயேற்பட்டு விலகினாலும் விலகாத உறவு. நாங்களாய்க்குலத்திலுண்டானமக்கள். நீ அக்குலத்திலுண்டாகி அதிபதியாயிருப்பவன். இந்த உறவு இந்த ஜந்மமுள்ளவரையில் எவ்விதத்திலாவது விலகுமா? 'இனி நீங்கள் இங்கு வரவேண்டாம், என் முகத்தில் விழிக்கவேண்டாம்' என்று கட்டளையிடுவதாகவும் நாங்களதை அநுஸரித்து அப்படியே இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அதனால் அந்த உறவு விலகுமா? இல்லாமல் போகுமா? இனி இதைவிட மிகப் பெரிய உறவு ஒன்று இருக்கிறதே அதை எடுத்துக் கொள்வோம். நீ ஸர்வவஸ்துக்களுக்கும் அந்தராத்மாவான ஸர்வேச்வரன், நாங்கள் உனது உடம்பும் உடமையுமான சேதனவஸ்துக்கள். இந்த உறவு இந்த நந்தகோகுலத்திலுள்ள இந்தத்திருமாளிகையில் உன்னை வந்து ஸேவிக்காமல் இருப்பதனாலே விலகிவிடுமா? ஆகவே இங்கு யார் ஒழித்தாலும் ஒழியாத உறவு நம்மிடையே இருக்கின்றது. இப்படி ஒழிக்க முடியாத உறவுள்ள எங்களை இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது காக்கவேண்டியது நீதான். வேறு யாருமில்லை. ஆகவே இப்போது உபேக்ஷை பண்ணுவதில் பயனொன்றுமில்லை. ஆக இக்காரணங்களால் எங்கள் குற்றங்களைக்கண்டு சீறியருளாதே. அவற்றைப் பொறுத்தருள்.

ஸ்ரீ க்ருஷ்ணன்:— யார் எதைச் செய்கின்றார்களோ அவருக்கு அதற்குத் தக்க பலனைக் கொடுப்பவன் நான். குற்றங்களைச்செய்தோம் ஆனாலவற்றுக்குத் தக்க பலனைக் கொடாதே என்றால் அதெப்படி ஸாத்யம்?

நாயகப்பெண்:— இறைவா! நீ ஸர்வஸ்வதந்த்ரனான ஸர்வேச்வரன். 'ஏன் இதைச்செய்தாய்' என்றோ 'ஏன் இதைச் செய்யவில்லை' என்றோ உன்னைக் கேட்பார் யார்? ஆகவே நீ எங்கள் குற்றங்களைப் பொறுத்துக்கொள்.

ஸ்ரீக்ருஷ்ணன்:— உங்கள் குற்றங்களுக்காக உங்களை சிக்ஷிக்காமல் மற்றவர் குற்றங்களுக்காக அவர்களை சிக்ஷித்தால் என்னை 'பக்ஷபாதமுள்ளவன்' என்றும், 'தயையில்லாதவன்' என்றும், தூஷிப்பார்களே.

நாயகப்பெண்:— அறிந்தவர்கள் ஒருகாலும் தூஷிக்கமாட்டார்கள். 'சீறியருளாதே' என்றிப்பெண்கள் வேண்டிக்கொண்டார்கள். அதனால் அவர்களை எம்பெருமான் சிக்ஷிக்காமல் ஸ்வீகரித்தான். மற்றவர்களும் இப்படி வேண்டிக்கொண்டார்களாயின் அவன் அவர்களுடைய குற்றங்களைப்பொறுத்து ரக்ஷிக்கவே ரக்ஷிப்பான். 'ராவணன் வந்தாலும் ஏற்பேனென்று கூறிய கருணாநிதியன்றோ! அவன், என்றே கொள்வார்கள். அறியாதவர்களும் அஸுரப்ராக்ருதிகளும் காரணமில்லாமலே தூஷித்துக்கெடுவார்கள். அந்தத்தூஷணங்களைப்பொருள் படுத்தவேண்டியதில்லை.

ஸ்ரீ க்ருஷ்ணன்:— (புன்சிரிப்புடன்) நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. எனக்கு எது இஷ்டமோ அதைத்தான் செய்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் 'சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே' என்று கேட்கின்றபடியால் 'சீறவில்லை 'சீறமாட்டேன்' என்று உறுதியாய்ச்சொல்லுகிறேன். மேல் நடக்கவேண்டியதைப்பற்றிப் பேசு.

நாயகப்பெண்:—நீ தாராய் பறை. நீ வாத்யம் முதலியவற்றைத் தந்து நீராட்டத்திற்குப் புறப்படுவதுதான் இனிச் செய்யவேண்டியது.

இப்படி இப்பெண் சொன்னவுடனே ஸ்ரீக்ருஷ்ணன் பிராட்டியின் முகத்தைப்பார்த்தார். உடனே அவள் எல்லா ஏற்பாடும் செய்தாய்விட்டது. வீதியில் சங்கு ஊதுபவர்கள் முதலான எல்லோரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் புறப்படலாம் என்றாள்.

திருப்பாவைக் கதையில் வாத்யலாபம்
அல்லது பறைபெறல் என்கிற
ஆறும் அதிகாரம்
முற்றிற்று.

29. சிற்றஞ்சிறுகாலே

நப்பின்னைப்பிராட்டியின்வார்த்தையைக்கேட்டவுடன் அங்கிருந்தவர் யாவரும் அங்கிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமாய் நின்று எம்பெருமான் ஸிம்ஹாஸநத்திலிருந்து எழுந்திருப்பதை எதிர்பார்த்தனர். ஸ்ரீக்ருஷ்ணனும்எழுந்திருக்க ஆரம்பம் செய்தார். அந்த க்ஷணத்தில் ஒருவரும் எதிர்பாராத வகையில் நாயகப் பெண் திடீரென்று ஸ்ரீக்ரிஷ்ணனுடைய திருவடிகளின் ஸமீபத்தில் சென்று ஸ்த்ரீகள் ப்ரணமம் செய்யும் முறையில் அஷ்டாங்க ப்ரணமம் செய்ய ஆரம்பித்து மேன்மேலும் செய்து கொண்டேயிருந்தாள். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஸ்ரீக்ருஷ்ணன் வெகுவேகமாக ஸிம்ஹாஸநத்திலிருந்து குதித்துத் தனது இரண்டு திருக்கரங்களாலும் அவளுடைய இரண்டு புஜங்களையும் பிடித்துத்தூக்கிநிறுத்தி 'என்ன அம்மா இது. உனக்குவேண்டியது எதுவோ அதையெல்லாம் தந்துவிட்டேனே. உன் னிஷ்டத்திற்குமாறாகஏதாவதுநடந்தாலன்றோ நீ வருந்தவேண்டும். சிறிதும் வருந்தாதே. உன்மனத்திலிருப்பதைத்தாராளமாகச்சொல்' என்று ஸமாதானப்படுத்திக்கொண்டே சொன்னார். நாயகப்பெண்ணின் கண்களைக் கண்ணீர் மறைத்தது. நெஞ்சு அடைப்புண்டது. வாய் எழவில்லை. அவளால் நிற்கவே முடியவில்லை. வெகு சிரமப்பட்டு ஸமாளித்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள். மெதுவாக ஒன்றிரண்டு வார்த்தைகளே அவ்வப்போது வெளிவந்தன.

நாயகப்பெண்:— சிற்றஞ்சிறுகாலே வந்து. யோகக்ஷேமங்களுக்காக ஸர்வேஸ்வரனை அணுகவேண்டும்மென்று விதியுள்ள உஷ:காலமிது. அதில் நாங்கள் வந்திருக்கின்றோம்.

ஸ்ரீ க்ருஷ்ணன்:— உண்மை.

நாயகப்பெண்:— உன்னைச்சேவித்து. வந்து உன்னை வணங்கி ஸ்தோத்ரம் செய்து பஜிக்கின்றோம்.

ஸ்ரீ க்ருஷ்ணன்:— ஆம், செய்கின்றீர்கள். நீ ஒருத்தியே செய்தாலும் எல்லோருக்கும் ப்ரதிநிதியாகசெய்கின்றாயாகையால் எல்லோருமே செய்ததாக ஆகின்றது.

நாயகப்பெண்:— இது எதற்காகவெனில், உன் பொற்றாமரை யடியே போற்றும் பொருள் ஒன்று உண்டு. பொன்போல் எங்களுக்குக் கொண்டாடத்தக்க உயர்ந்த செல்வமாயும், தாமரைபோல் ம்ருதுவாய் சிவந்து போக்யமாயும் பொன்னுலாகிய தாமரைபோல் நித்ய போக்யமாயுமிருக்கின்ற உன் திருவடியில் நாங்கள் பணிந்து ப்ரார்த்தித்துப்பெறவேண்டிய பலன் ஒன்றிருக்கின்றது. கேளாய். அதை விண்ணப்பிக்கிறேன். நீ கேட்டருள வேண்டும்.

ஸ்ரீக்ருஷ்ணன்:— ஆஹா அப்படியே.

நாயகப்பெண்:— பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து. பசுக்களை மேய்த்து அதனால் ஜீவனம்செய்கின்ற இந்த இடைக்குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாய்.

ஸ்ரீக்ருஷ்ணன்:— அதனால்?

நாயகப்பெண்:— நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது... அபபடி வந்து பிறந்திருக்கின்ற நீ அதன் ப்ரயோஜனத்தைப் பெறவேண்டுமன்றோ. அதன் ப்ரயோஜனமாவது எங்களைக்கொண்டு உன் கைங்கர்யங்களைச் செய்வித்துக்கொள்வதுதானே. அவற்றை நீ அவச்யம் எங்களிடத்திலிருந்து கொள்ளவேண்டும். கொள்ளாமல் போவது என்பதில்லாமல் ..

ஸ்ரீக்ருஷ்ணன்:— (நாயப்பெண்ணின் வாக்யம் முடியாமலிருக்கும் பொழுதே) என்ன பெண்ணே! இதற்கா இப்படி அழுது அயர்கின்றாய்? முன்னமேயேதான் நீ இதைப் பற்றிச்சொன்னாய். நானும்தான் 'அப்படியே' என்று அங்கீகரித்து எல்லாவற்றையும் நடத்த ஸித்தமாய்விட்டேனே. மறுபடியும் அதைப் பற்றி ஏன் இப்படி வருந்துவதும் வணங்குவதும் வேண்டுவதும்?

நாயகப்பெண்:— இற்றைப்பறைகோள்வான் அன்று காண் கோவிந்தா! ஓ எம் கருணைக் கடலே! வாத்ஸல்யநிதியே! இன்று பறை கொள்வதற்காகவும் அதைக்கொண்டு இந்த மார்கழி நோன்பை நிறைவேற்றுவதற்காகவும் அன்று இப்போது நான் மறுபடியும் சரணாகதி பண்ணி ப்ரார்த்திப்பது. இப்போது உன்னை ஸேவித்து உன் பொற்றாமரையடியே போற்றும் பொருள் முற்றிலும் வேறுபட்டது. பறை தருவதையும், கூடவிருந்து வ்ரதத்தை முடித்து வைப்பதையும்தான் நீ முன்னமே அங்கீகரித்து அநுக்ரஹித்து விட்டாயே. பிராட்டி சொன்னபடி எல்லாம் ஸித்தமாகிவிட்டதே. இனி நாம் நீராடுவதற்குப் புறப்படவேண்டியதுதானே. அதைப்பற்றி மறுபடி நான்

கேட்பேனு? கேட்பதற்கு ஆவச்யகதை என்ன விருக்கின்றது?

ஸ்ரீக்ருஷ்ணன்:— ஓஹோ, அப்படியா, வேருென்று இப்போது கேட்கப்போகின்ருயா, ஸரி, ஸாதாரணமாயதைக்கேட்கக்கூடாதோ? இவ்வளவு வருத்தமும் தீனவ்ருத்தியும் எதற்காக?

நாயகப்பெண்:— இல்லை க்ருஷ்ணு. நாங்கள் என்னென்ன கேட்டோமோ அதையெல்லாம் கொடுத்து, என்னென்ன செய்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தோமோ அதையெல்லாம் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி நீ எங்களைப் பரிபூர்ணமாக அநுக்ரஹித்தாய். நாங்களிப்போது அநுஷ்டிக்கவாரம்பித்திருக்கும் இந்த நோன்பு உனதநுக்ரஹத்தினுல் இனிது முடிந்துவிடுமென்று நிச்சயித்து உள்ளம் பூரித்தது. இன்று முழுவதும் அதற்குமேல் நாளை பாரணைவரையிலும் உன்னேடு கூடவே இருந்துன் குற்றேவல்களைச் செய்து களிக்கப்போகின்றேமென்று மிகவும் குதூஹலித்தது. ஆனுல் அடுத்த க்ஷணத்தில் வேருென்று தோன்றி உலகத்தையே இருள்மயமாக்கி விட்டது. பாரணை முடிந்ததும் நீ உன் திருமாளிகைக்குச் சென்றுவிடுவாய். நாங்கள் எங்கள் வீட்டுக்குச் செல்லவேண்டும். உன்னைப்பிரிந்தெப்படியிருப்பது, எப்படிக்காலம் கழிப்பது எப்படி வாழ்வது, ஐயோ பேராபத்திற்குள்ளாக வேண்டுமே என்று இவ்வெண்ணங்கள் உண்டாகி என் ஆவியை திகைக்கச் செய்தது.

'स्वर्गेऽपि पातभीतस्य क्षयिष्णोर्नास्ति निर्वृतिः'

'ஸ்வர்க்கத்திற்குச் சென்றாலும், ஐயோ, இந்த போகம் நிலைத்திராதே. சீக்ரமே முடிந்துவிடுமே, என்ற பயம் தோன்றி நிம்மதியிராமல் செய்யும்' என்பார்கள். அந்த ரீதியிலிப்போது உண்டாயிருக்கும் உன் ஸேவையின் பேரின்பமும் மறைந்துவிட்டது. ஆகையால் அழுதேன். உன்னைத் தொழுதேன். அப்பேராபத்திலிருந்து எங்களைக் காக்கவேண்டுமென்று உன்னைக் கேட்க முயன்றேன்.

ஸ்ரீ க்ருஷ்ணன்:— அப்படியா? ஐயோ பாவம். நீ என்ன வேண்டுகின்ருய்? சொல்லு பார்ப்போம்.

நாயகப்பெண்:— எற்றைக்கும். இன்று ஆரம்பித்த இந்த வ்ரதம் முடியும்வரை மட்டுமன்றி இந்த ஜன்மம் நீடித்திருக்கும் வரையில் எல்லா நாட்களும், 'ஏழேழ் பிறவிக்கும்' ஒரு பெரிய நல்லகாரியமோ, கெட்டகாரியமோ, செய்தால் அது ஏழு ஜன்மங்களெடுக்கச்செய்து அது வரையில் தொடருமென்பார்கள். இவ்விதமாக எத்தனை ஏழேழ் ஜன்மங்களெடுத்தாலும் அத்தனை ஜன்மங்களிலும் ஒரு நாள்கூட விடாமல் எல்லா நாட்களும், உன்னேடுற்றேமேயாவோம். உன் உறவு, உன் ஸம்பந்தம், உள்ளவர்களே ஆகக்கடவோம். உன் ஸந்நிதியிலேயே நாங்களிருக்கவேண்டும். ஒரு க்ஷணமும் பிரிந்திருக்கக்கூடாது. பிரியாமலிருந்து செய்யும் கார்யமென்னவெனில் உனக்கே நாமாட்செய்வோம்.' உனக்குக் குற்றேவல்கள் செய்வதே. உன்னேடு கூடவே இருந்து உனது கைங்கர்யங்களையே செய்துவரவேண்டும். இந்த ஜன்மத்திலும் அதுபோலவே இனி வருங்காலத்தில் எங்களுக்கு எந்த இடத்தில் எந்தக் குலத்தில் பிறப்பு ஏற்படுகிறதோ அந்த இடத்தில் அதே குலத்தில் நீயும் வந்து பிறந்து அந்த ஜன்மங்களெல்லாவற்றிலும், எப்பொழுதும் உன்னேடு கூடவேயிருந்து உனக்குக் கைங்கர்யம் செய்ய வேண்டும், இதுதான் நாங்கள் வேண்டுவது.

ஸ்ரீ க்ருஷ்ணன்:— இந்த ஜன்மம் முடிந்தவுடனே புநர்ஜன்மம் எடுக்காமல் நித்யவிபூதிக்கு வந்து அங்கு என்னுடன் கூடவிருக்கவேண்டுமென்றல்லவோ தெரிந்தவர்கள் ப்ரார்த்திக்கின்ருர்கள். நீ என்ன இனியும் பலபல ஜன்மங்கள் உண்டாவதை இசைந்து அவற்றிலெல்லாம் என்னுடைய ஸம்பந்தம் விடாமலிருக்க வேண்டுமென்று மட்டும் கேட்கின்ருய்?

நாயகப்பெண்:— அப்படி நித்யவிபூதிக்குப் போய் அங்குப் பேராநந்தம் பெற அபேக்ஷிப்பது ஒருபடி.

'एतत्प्रार्थ्यं मम बहुमतं जन्म जन्मान्तरेऽपि
त्वत्पादांभोरुहयुगगता निश्चला भक्तिरस्तु'

'दिवि वा भुवि वा ममास्तु वासो
नरके वा नरकान्तक प्रकामम्।
अवधीरितशारदारविन्दौ
चरणौ ते मरणेऽपि चिन्तयामि'

'ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போவதே'
இங்கே திரிந்தேற் கிழுக்குற்றேன்
இரு மாநில முன் உண்டுமிழ்ந்த
செங்கோலத்த பவளவாய்ச்
செந்தாமரைக்கண் என்னம்மான்

பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப்
புலன்கோள் வடிவேன் மனத்ததாய்
அங்கேய் மலர்கள் கையவாய்
வழிபட்டோட வருளிலே.

‘नातः परं किमपि मे त्वयि नाथनीयं
मातर्दये मयि कुरुष्व तथा प्रसादम् ।
बद्धादरो वृषगिरिप्रणयी यथाऽसौ
मुक्तानुभूतिमिह दास्यति मे मुकुन्दः’

‘त्वं चेत् प्रसीदसि तवास्मि समीपतश्चेत्
त्वय्यस्ति भक्तिरनघा करिशैलनाथ ।
संसृज्यते यदि च दासजनस्त्वदीयः
संसार एष भगवन्नपवर्ग एव’

என்னும்படி இங்கேயே முக்தாநந்தாநுபவம் பெறுவதொருபடி. இதையே நாங்கள் வேண்டினோம்.

ஸ்ரீகிருஷ்ணன்:— நீங்கள் வெகு ஸாத்விக ப்ரக்ருதிகளாயிருக்கின்றீர்கள். என்னிடத்தில் உங்களுக்குள்ள பக்தி அபாரம். ஆகையால் எல்லாம் உங்கள் மனோதப்படியே நடக்கும். இதற்கு இவ்வளவு ஆயாசப் படவேண்டியதில்லை.

நாயகப்பெண்:— அப்படிச்சொல்வதற்கில்லை க்ருஷ்ணா!

‘सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ॥
इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत्तौ ह्यस्य परिपन्थिनौ’

என்பது உனக்குத் தெரியாத விஷயமன்று. ப்ராக்ருதியானது உன்ஸ்வரூபத்தைமறைத்துத் தன்னையே மிகவும் போக்ய வஸ்துவாகக் காட்டும் இயற்கையுள்ளது. இதனால் நாங்கள் கட்டுப்பட்டிருக்கின்றோம். ஏதோ தக்காலம் உன்னை ஸேவிப்பதிலும் உன் கைங்கர்யங்களைச் செய்வதிலும் ருசி உண்டாயிருந்தாலும் இனி போகப்போக இந்நிலை மாறி வேறு விஷயங்களில் காமம், அதாவது ஆசை, உண்டாகலாம். அப்படி உண்டானால் நாங்கள் அடியோடு கெட்டுப்போகவேண்டியதுதானே. அதைநினைக்க உள் நடுக்கம் உண்டாகின்றது. ஆகையால் உன்னை வேண்டுகின்றோம். மற்றை நம் காமங்கள் மாற்று. உன்னோடிருந்து உன் கைங்கர்யங்களைச் செய்வதுதவிர மற்ற ஐஹிகாமுஷ்மிகங்களான எந்த விஷயங்களிலும் ஆசை உண்டாகாத விதம் மனஸ்ஸு அவ்வளவு பரிசுத்தமாயும் அவ்வளவு ஸத்வகுணம் தலையெடுத்துமிருக்கும்படி நீ அருள் செய்ய வேண்டும். சேதநர்கள் காமங்கள் இல்லாமலிருக்க முடியாது. ஆனால் அந்தக் காமங்கள் உன்னைப்பற்றியவையாய் இருக்கவேண்டுமேயன்றி மற்ற விஷயங்களைப்பற்றியவையாயிருக்கக்கூடாது. அப்படியிருக்கும் நிலை வர ப்ரஸங்கிக்குமாகில் அதை மாற்றி நீ எம் காமங்களை உன் விஷயமாகவே ஆக்கிக்கொள்ளவேண்டும்.

இப்படி நாயகப்பெண் நெஞ்சுருகி செய்த விஜ்ஞாபனத்தைக் கேட்டு அத்யந்தம் ப்ரீதனான எம்பெருமான் ‘நீ வெகு கெட்டிக்காரி’ என்று அவளைப் புகழ்ந்து ‘அப்படியே ஆகட்டும்’ இனி உங்களுக்கு எங்காளும் என்னுடைய பரிவோ, வேறுவிஷயமான காமமோ, உண்டாகமாட்டாது’ என்று ஆச்வாஸப் படுத்திவிட்டு எல்லோருடனும் அங்கிருந்து புறப்பட்டு உத்தேசித்தபடி வாத்யகோஷம் முதலானவற்றுடன் வீதி வலமாக யமுனைக்குச்சென்று நீராடி மற்ற கார்யங்களையும் அநுஷ்டிப்பித்து வெகு குதூஹலமாகவும் ஆநந்தமாகவும் கோபகுமாரிகளுடைய நோன்பு நிறைவேறும்படி செய்தருளினான்.

திருப்பாவைக் கதையில்
நித்யகைங்கர்ய ப்ரார்த்தனம்
என்கிற ஏழாம் அதிகாரம் முற்றிற்று.

---

30. வங்கக்கடல்

திருப்பாவைக்கதை முடிந்து விட்டது. இக்கதையைக் கூறுகின்றது ஸ்ரீ ஆண்டாள் திருவாய்மலர்ந்தருளிய திருப்பாவை என்னும் திவ்யப்ரபந்தம். திருப்பாவையென்னும் ப்ரபந்தத்தில் அடங்கிய கதை இது என்கிற காரணத்தினாலேயே திருப்பாவைக் கதை என்ற பெயர் இதற்கு இடப்பட்டது. முப்பது பாட்டுக்கள் கொண்ட இப்ப்ரபந்தத்தில் ‘மார்கழித்திங்கள்’ என்றது முதல் ‘சிற்றஞ்சிறுகாலே’ வரையிலுள்ள இருபத்தொன்பது பாட்டுக்களால் இக்கதை கூறப்பட்டது. இனிக் கடைசியான இப்பாட்டில் திருப்பாவை ப்ரபந்தத்திற்குள்ள சிறப்புக்களை, அதாவதுவிசே

ஷங்களை, ஸ்ரீ ஆண்டாள் நமக்கு நன்றாகத்தெரியும்படி தானே எடுத்துக் கூறுகின்றாள்.

நூலின் சிறப்பிற்கு அதில் கூறப்பட்ட விஷயம், அதை இயற்றியவர் அதன் ஸ்வரூபம், அதனாலுண்டாகும் பலன், ஆகிய இவற்றின் சிறப்புக்கள் காரணம். ஆகவே ஸ்ரீ ஆண்டாள் இந்தச்சிறப்புக்களெல்லாம் இங்கிருக்கின்றன. என்கின்றாள். அவற்றில் முதலில் விஷயச்சிறப்பை

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகோண்டவாற்றை

என்று விளக்கினாள். உத்தம குணசாலிகளான மஹாபுருஷர்களுடைய சரித்ரமே ரஸமயமான நூலுக்கு அமையக்கூடிய உயர்ந்தவிஷயம். அவ்விதமானவர்கள் தமது நடவடிக்கையில் பரஸ்பரம் காட்டும் அன்பே ரஸமென்ற பெயர் பெற்று ப்ரபந்தத்திற்கு மிகுந்த சோபையைத் தருகின்றது. அகிலஹேயப்ரத்யநீகனாய் ஸமஸ்தகல்யாணகுணாகரனாய் பரமகாருணிகனாய் ஶ்ரிய:பதியாயிருக்கின்ற புருஷோத்தமனிடத்தில் போய் எவ்விதக்களங்கமுமில்லாமல் வெகு நிர்மலமாய் பக்தி ரஸம் நிறைந்ததாயிருக்கின்ற உள்ளத்தோடு கூடிய கோபகந்யகைகள் வணங்கி வேண்டித் தமது நோன்புக்கு அவச்யமான ஸாமக்ரிகளைப் பெற்றார்களென்ற இந்த நிகழ்ச்சி இங்கு விஷயம். நோன்பை முக்கியமாகவைத்து அதை அடிமுதல் நுனி வரையில் வர்ணிப்பது இங்கு உத்தேச்யமன்று. அதற்காக வேண்டியிருந்த வஸ்துக்களை ஸ்ரீகிருஷ்ணனிடத்திலிருந்து அப்பெண்கள் பெற்றார்களென்கிற இந்தப்பகுதியே இந்த ப்ரபந்தத்திற்கு விஷயம். பெண்கள் தமது க்ருஹங்களிலிருந்து புறப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணன் திருமாளிகைக்குச் சென்று அங்கவரை வணங்கி அவருடைய க்ருபையினால்பறையைப்பெற்றார்கள் என்பது கூறப்படுகின்றது. அவர்கள் சென்ற விதம் முதலாவதிலிருந்து இருபதாம் பாட்டு வரையில் கூறப்பட்டது. முதலில் விழித்தெழுந்த பெண் தனது தோழிகளைக்கூவியழைக்க அவர்கள் விழித்தெழுந்து வந்தவுடனே தாம் செய்யவேண்டிய கார்யங்களையும் அவற்றாலுண்டாகக்கூடிய நன்மைகளையும் செவ்வையாக அறிந்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணன் திருமாளிகைக்குப் போகப் புறப்பட்டு அப்போது சில பெண்கள் இன்னும் எழுந்து வரவில்லை என்பதை உணர்ந்து அவரவர்களுடைய வீட்டுக்குப்போய் எழுப்பி அழைத்துக்கொண்டு எல்லோருமாகச் சேர்ந்து வாசல் காப்பானுடைய அநுமதியின் பேரில் அரண்மனையினுள்ளே போய் நந்தகோபன் முதலான பெரியோர்களை எழுப்பி அவர்களுடைய அநுமதியும் பெற்று ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பள்ளியறைக்குப்போய்ப் பிராட்டியை எழுப்பி அவள் கதவைத் திறந்துவிட எல்லாப் பெண்களும் எம்பெருமானிடம் சென்றார்கள் என்றவிது அவர்கள் சென்றவாறு.

'ஏற்ற கலங்கள்' என்கிற இருபத்தோராம் பாட்டிலிருந்து நாலு பாட்டுக்களில் அவர்கள் எம்பெருமானை இறைஞ்சின விதம் கூறப்பட்டிருக்கின்றது. திருப்பள்ளியெழுச்சி பாடி எம்பெருமான் திருக்கண் மலரும்போது ப்ரதம கடாக்ஷத்தைப் பெற்று பிறகு அவனால் பூர்ணமாகக் கடாக்ஷிக்கப்பட்டு, அவனை ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளப்பண்ணிப் பலவிதமாகப்போற்றி வேண்டினார்கள். இது அவர்கள் இறைஞ்சினவாறு. 'ஒருத்தி மகனாய்' முதலான நான்கு பாட்டுக்களில் பறைகோண்டவாறு கூறப்பட்டிருக்கின்றது. எம்பெருமான் பறை தந்தருளினால் அதன்மேல் நடப்பனவற்றைக் கூறி பறை என்றால் அது மாத்திரமன்றி மற்றும் பல பொருள்களைக் குறிக்கின்றதென விஜ்ஞாபித்து, அவற்றோடு பகவான் தானாக ஒரு ஸம்மானம் கொடுப்பதாக அநுக்ரஹிக்க அது இப்படிப்பட்டதாக இருக்கலாமென்று விண்ணப்பம் செய்து இப்படித் தாம் வந்து பாடி ப்ரார்த்தித்ததிலுள்ள குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளும்படி வேண்டி அபேக்ஷித்த வஸ்துக்களைப்பெற்றார்கள். இது பறை கொண்டவாறு. இப்படிக்கேட்ட எல்லாவற்றையும் அதற்குமேலும் கொடுக்கும் பரமோதாரனான ஸர்வேச்வரனிடம் சென்று அவனுடைய பெருமையையும் கல்யாணகுணங்களையும் உள்ளபடி அறிந்து அவன் திருவடிகளில்

அபார பக்தியையுடையவர்கள் தமது விருப்பப்படி அவனை ஸேவித்துப் புகழ்ந்து பாடி தமது ஆசையை நிறைவேற்றிக்கொண்டு களித்தார்கள் என்ற இவ்விஷயத்தைக் காட்டிலும் சிறந்தவிஷயம் உலகில் மற்றொன்று இருக்கவே முடியாதென்பது இங்குக் கருத்திலுள்ளது.

ஸ்ரீகிருஷ்ணன் ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளியிருப்பதையும் அருகே கோபகுமாரிகள் அவனுடைய ஸேவையில் ஈடுபட்டுப் பரவசராய் கைகுவித்து வணங்கி வரிசை வரிசையாக நிற்பதையும் நாமெல்லோரும் நமது மனக்கண் முன்னே தோற்றுவித்து அநுபவிக்க வேண்டுமென்று கருதி

'வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார்'

என்கின்றாள் கவிசிகாமணியான ஸ்ரீகோதாதேவி. அந்த நிலையில் அப்பெண்கள் எம்பெருமானை எந்தவிதமாக பாவிக்கின்றார்கள் என்பதையும் இதில் விளக்கியிருக்கின்றாள். க என்று சதுர்முகனுக்குப் பெயர். ஈசன் என்றால் சிவன். இந்த இரண்டு தேவச்ரேஷ்டர்களும் எம்பெருமானுடைய திருமேனியிலிருந்துண்டானவர்கள். இதைக் குறித்து வந்தது கேசவனென்னும் திருநாமம். மாதவனென்றால் லக்ஷ்மீபதி என்பது பொருள். 'பெரும் அலைகளையுடைய ஸமுத்திரத்தைக் கடைந்து அதிலிருந்து தோன்றிய ஸ்ரீமஹாலக்ஷ்மி தனது மார்பில் வந்து சேர அப்போது ஸர்வ தேவர்களுடையவும் முன்னிலையில் தான்தான் ஸ்ரிய:பதி என்பதை விளக்கிக்காட்டி எல்லாத் தேவர்களுக்கும் தேவனாய் தனக்கு மேல்பட்ட தேவன் ஒருவன் இல்லாதவனாய் நின்ற ஸாக்ஷாத் ஸர்வேச்வரனன்றோ இவன்' என்றிப்படி அவர்கள் அவன் பெருமையை சிந்தையில் கொண்டிருக்கின்றார்கள்.

இனி ஸ்ரீகிருஷ்ணன் இப்பெண்களைப்பற்றி என்ன எண்ணுகிறானெனில் 'இவர்களுடைய அழகுதான் என்ன! பளிச்சென்று ப்ரகாசிக்கின்றது முகம். திருமுகமிது. இது சந்திரன் போன்றது. கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம். ஸர்வதாபமும் நீங்கிவிடும். மற்ற அங்கங்களின் சோபையும் இப்படியே. அங்கங்களில் ஆபரணங்களைப் போட்டால் அந்த அழகை வர்ணிப்பதே ஸாத்யமன்று. ஆபரணங்களால் அங்கங்களுக்குச்சோபையா? அங்கங்களால் ஆபரணங்களுக்குச் சோபையா? இரண்டுமேயா? என்றிப்படி ஸந்தேஹப்படலாமேயன்றி நிச்சயிக்க முடியாது. இப்படி இயற்கையழகும் செயற்கையழகும் நிரம்பப்பெற்ற இப்பெண்கள் அதற்குத்தக்க குணங்களுள்ளவர்களாயிருப்பதோடு குலபரம்பரையாக அநுஷ்டிக்கப்பட்டு வரும் தர்மத்தைப் பரிபாலனம் செய்வதில் மிகுந்த ச்ரத்தையும் எல்லாவற்றிற்கும் சிகரமான பகவத்பக்தியும் சிறந்து ஓங்கும்படியான பரம ஸாத்விக நிலையில் இருக்கின்றார்களே' என்று ஆச்சர்யப்பட்டு மேல்மேலும் அதையே எண்ணி எண்ணிக் கொண்டாடுகின்றான். எம்பெருமானும் அவனைச் சார்ந்தவர்களும் கூடும்போது பரஸ்பரம் இத்தகைய அநுபவம் உண்டாகுமென்று குறிப்பாகக் காட்டுகின்றாள் ஸ்ரீகோதாதேவி. தன்னைச் சார்ந்தவர்கள் ஸ்த்ரீகளாகிலும் கடலைக்கடைந்தோ மற்ற விதமாக ப்ரயாஸப்பட்டோ எவ்விதத்திலும் கைவிடாது தன்னிடம்சேர்த்துக்கொள்ளுகின்றவனான எம்பெருமானிடம் இப்பெண்கள் சென்றிறைஞ்சினது எவ்வளவு பொருத்தமானது என்று தானும் ஸ்ரீகோதைப்பிராட்டி இங்கு ரஸாநுபவம் செய்கின்றார்கள். அங்கு என்று ஸ்ரீநந்தகோகுலத்தையும் நடுவே விளங்குகின்ற ஸ்ரீகிருஷ்ணன் திருமாளிகையையும் அப்பறை என்று ஸ்ரீகிருஷ்ணன் தந்தருள இடைப்பெண்கள் பெறும்படியான அதன் பாக்யந்தான் என்ன பாக்யமென்று கொண்டாடி அதையும் தன் மனக்கண் முன்னே வைத்து ப்ரத்யக்ஷம்போல் தான் பார்ப்பதைக் காட்டுகின்றாள்.

சிற்றஞ்சிறுகாலையில் நித்யகைங்கர்யம் ப்ரார்த்திக்கப்பட்டிருந்தாலும் பறை கொள்வதே ப்ரபந்தத்திற்கு ப்ரதான விஷயமாகையால் அது மாத்திரமே இங்கு கூறப்படுகின்றது. நித்யகைங்கர்யத்தை ப்ரார்த்திக்கும்படி அவ்வளவு ரஸமாக இருந்தது ப்ரக்ருத கைங்கர்யம் என்று இதன் ப்ரசம்ஸையிலேயே

அதற்கு நோக்கு என்றும் கொள்ளவேண்டும்.

இப்படி விஷயத்தின் சிறப்பு விளக்கப்பட்டது. இனி இப்ப்ரபந்தத்தை இயற்றிய தன் சிறப்பைக் கூறுகின்றாள்-

அணிபுதுவைப் பைங்கமலத் தண்டேரியல்
பட்டர் பிரான் கோதை சொன்ன

என்று கோதை செய்த ப்ரபந்தமிது. கோதைக்கு என்ன சிறப்பெனில் பட்டர்பிரானுடையவள் என்பதே சிறப்பு. இவ்வுலகில் ஒருவருக்குள்ள யோக்யதை பெருமை எல்லாம் குலத்தினாலும் தாய் தந்தையர் செய்யும் சிக்ஷையினாலும் உண்டாகின்றன. உத்தமோத்தம ப்ராஹ்மண ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் உதித்தவராய் ஜ்ஞாந வைராக்யாநுஷ்டானங்கள் நிரம்பப் பெற்வர்களுக்குள் சிறந்தவராய் பகவத்பக்தியே வடிவெடுத்து வந்ததோ என்னத்தக்கவராய் கர்ணாம்ருதமான திவ்ய ப்ரபந்தம் இயற்றி லோகோத்தர கவிஸார்வபௌமனாய் விளங்கிய பெரியாழ்வாருடைய புத்ரியாய்த் தோன்றி அவருடைய கடாக்ஷ விசேஷத்தாலும் சிக்ஷையினாலும் அறிவும் ஆத்மகுணமும், எம்பெருமானிடத்தில் அசஞ்சலமான பக்தியும் உயர்ந்த நூல் இயற்றுவதற்கேற்ற கவனசக்தியும் ஓங்கி நிற்கப்பெற்றவள் கோதை. ஆகவே இவள் மிகச்சிறந்த கவி. **'आत्मानं मानुषं मन्ये'** 'நான் மனிதனென்றே என் எண்ணம்' என்று ஸ்ரீராகவன் சொன்னதுபோல் கோதைப்பிராட்டி இப்படித் தன்னை மநுஷ்யஸ்த்ரீயாக வைத்துத் தன் சிறப்பெல்லாம் தன் தகப்பனாராலே வந்ததென்று தன் வினயத்திற்கேற்பக் கூறுகின்றாளாயினும் பெரியாழ்வாருக்கு இவள் எப்படிப் புத்ரியானாள் என்பதை ஆலோசிக்குமிடத்தில் 'அவர் புஷ்பத்தோட்டத்தை உழும்போது கண்டெடுக்கப்பட்டு அவரால் புத்ரீபாவத்தோடு வளர்க்கப்பட்டாள்' என்கிற சரித்ர நிகழ்ச்சி தோன்றி 'அவள் அயோநிஜை' பூமிப்பிராட்டியின் அம்சம், ஆகவே தெய்வத் தன்மை வாய்ந்தவள்' என்பது அறியப்படும். இதனாலிவள் திவ்யகவி, வெறும் மனுஷ்ய கவியல்லள் என்பது புலனாகின்றது.

சாஸ்த்ரங்களைச் செவ்வையாகக் கற்று உலக இயற்கையையும் நன்றாக அறிந்த மேதாவிகளுக்குச் சில அல்லது பல விஷயங்கள் வெகு அழகாகவும் இன்பகரமாகவும், தோன்றி அவர்களுடைய மனத்தை முழுதும் வசீகரிக்கும். அவர்கள் மேல்மேலும் அவற்றைச் சிந்தித்து மனக்கண்முன் சித்திரித்து மகிழ்வார்கள். அவர்கள் வாக்கு வன்மையும் பூர்வஜந்ம வாஸனையும் உள்ளவர்களாகில் அவர்களுடைய உள்ளத்தில் நிகழ்வதெல்லாம் உச்சநிலையையடைந்தவுடன், காமவின்பத்தில் மூழ்கியிருந்த இரண்டு பக்ஷிகளில் ஒன்றை ஒரு வேடன் கொன்றதைப் பார்த்தபோது வால்மீகியினுள்ளத்தில் பொங்கியெழுந்த துயரம் எப்படி மா நிஷாத ப்ரதிஷ்டாம் த்வம் என்ற ச்லோகரூபமாக வெளிக்கிளம்பிற்றோ அப்படியே ச்லோகரூபமாக வெளிவரும். இப்படி வெளிவந்த ச்லோகங்களே காவ்யமென்கிற சிறப்புப் பெயரைப் பெறுகின்றன. பால் நிறைந்த குடம் ஒன்று தளும்பினால் அதன் மேல் வந்து வழிவது எப்படிப் பாலாகவே இருக்குமோ அப்படியே ரஸாநுபவம் நிறைந்த உள்ளம் கனிந்து அதிலிருந்து வெளிவரும் சொற்களும் ரஸமயமாகவே இருக்கும். அப்படிக்கனியாத உள்ளமுள்ளவர்களுடைய சொற்கள், ச்லோகங்கள், எல்லாம் ரஸமில்லாமல் ஜீவனில்லாத உடல் போன்றிருக்கும். இவர்கள் ச்லோகங்களை இயற்றினாலும் கவிகளாகார்; போலிக்கவிகளாவர். இவ்வாறன்றி முற்கூறியபடி ரஸமயமான ச்லோகங்களைச் செய்பவர் கவி என்னும் உயர்ந்த பதத்திற்கு உரியவராவர். ச்லோகங்களில் எவ்வளவுக்கெவ்வளவு ரஸம் அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றை இயற்றியவர் கவிபதத்தில் உயர்ந்தவராவர். இப்படிப்பட்டவர்கள் எழுதிய நூல் உத்தம காவ்யமாகும்.

இயற்கையாலும் மற்ற விசேஷகாரணங்களாலும் பால்யம்முதல் பகவானிடத்திலேயே மனத்தை வைத்த ஸ்ரீ கோதாப்பிராட்டி வேறு எவ்விஷயத்திலும் எவ்விதச் சிந்தையுமில்லாமல் பகவானையும் அவனுடைய ரூபகுண விபூதிகளையும் திவ்ய சேஷ்டிதங்களையும் மனப்பாடம்

பண்ணி அநுபவித்து ஆநந்தமெய்தினாள். தான் ஸ்த்ரீயாகையால் அந்த நிலைக்கேற்றபடி ஸ்த்ரீகள் எந்த வழியில் பகவானை அநுபவிப்பார்களோ அந்த வழியையே ப்ரதானமாகக் கொண்டாள். ஸ்த்ரீகளுக்குக் கன்னிப் பருவம், பிறகு கணவனையடைந்து அவனுடைய ஸஹதர்மசாரிணியாவது, என்ற இரண்டு நிலைகள் உண்டு. இந்த இரண்டு நிலைகளிலுமிருந்து ஸ்ரீகோதை பகவானை அநுபவித்தாள். ஆனால் அதை ஸாக்ஷாத் தனது அநுபவமாக வைக்காமல் இடைப்பெண்களுடைய அநுபவமாக வைத்தாள். அதில் அவர்களுடைய கன்னிப் பருவ அநுபவம் திருப்பாவையாக உருவெடுத்தது.

ஸ்ரீ வில்லிபுத்தூரையே திருவாய்ப்பாடியாகவும் அங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வடபெருங்கோவிலுடையான் என்கிற எம்பெருமானை ஸ்ரீகிருஷ்ணனாகவும் அங்குள்ள பெண்களையெல்லாம் இடைப்பெண்களாகவும் தன்னை அவர்களுக்குள் ஒருத்தியாகவும் பாவித்து ஸ்ரீ கோதை ஸாக்ஷாத்காரம் போன்ற விசத அநுபவம் பெற்றாள். இன்பமயமான அந்த அநுபவமே திருப்பாவையில் ப்ரதிபலிக்கின்றது. வெகு கெட்டிக்காரியான நாயகப்பெண்வேஷம் தரித்தது ஸ்ரீ கோதாப் பிராட்டியேதான் என்பார்கள் ரஸிகர்கள்.

ரஸங்களுக்குள் பகவதநுபவரஸம் உயர்ந்தது. அதிலும் புருஷோத்தமனான அவனை ஸ்த்ரீகள் அநுபவிக்கும் வகையில் அநுபவிப்பது மிகவும் உயர்ந்தது. இதில் பூர்ண யோக்யதையைப்பெற்ற கோதாப்பிராட்டி இயற்றியதாகையால் இந்த ப்ரபந்தத்தின் பெருமை இவ்விதமானதென்று சொல்வது அரிது.

இப்படித் தனக்குள்ள சிறப்புத் தன் தகப்பனாகிய பெரியாழ்வாரால் உண்டானதென்று கூறும் ஆண்டாள் அவருடைய பெருமையின் காரணத்தைக் குறிப்பாகக் காட்டக் கருதி 'அணி புதுவை (ப்பட்டர்பிரான்)' என்கின்றாள். ஸ்ரீ வில்லிபுத்தூரில் எழுந்தருளியிருப்பவர் பெரியாழ்வார். பகவானுடைய நித்யஸாந்நித்யமுள்ளது ஸ்ரீ வில்லிபுத்தூர். அவனுக்கு நித்யோத்ஸவம் அங்கு இடைவிடாமல் நடந்து வரும். அதற்காக அந்நகரம் எப்பொழுதுமே வீதி அலங்காரங்களையும், மாளிகையலங்காரங்களையும், நிரம்பப்பெற்று விளங்கும். அன்றியும் எம்பெருமானுடையவும், ப்ரஹ்மவர்ச்சஸத்தினால் ஜ்வலிக்கும் அவனது அடியார்களுடையவும், நித்யவாஸத்தினாலுண்டான சீர்மைகாரணமாகப் பூமண்டலத்திற்கே ஓர் ஆபரணமாக விளங்குகின்றது அந்த க்ஷேத்ரம். அதில் ஜநித்து வளர்ந்து அந்த எம்பெருமானுக்குத் தொண்டு செய்து குருமுகமாக அத்யயனம் செய்யாமலேயே ஸர்வவேதங்களையும் சொல்லும்படியான திவ்யகடாக்ஷம் பெற்று ப்ராஹ்மணகுலதிலகராய் திகழ்ந்தாரவர், என்றதாகின்றது.

இப்படி எம்பெருமானுடைய திவ்யகடாக்ஷத்தினால் அபார யோக்யதையைப் பெற்ற இவர் அதற்குத்தக்க புருஷார்த்தத்தையும் பெற்றிருந்தார் என்கின்றாள்— பைங்கமலத் தண்தெரியல் (பட்டர் பிரான்) என்று. புஷ்பத்தோட்டம் வைத்துப் பரிபாலித்து அதிலுண்டான புஷ்பங்களை மாலையாகக்கட்டி இவர் காலைமாலை இருவேளைகளிலும் மற்றும் ப்ராப்தமான ஸமயங்களிலும் எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து அவனுகந்த அந்தக் கைங்கர்யத்தைச் செய்துவந்தார். காலையில் நந்தவனத்திலிருந்த விசாலமான நடவாபிகளில் ஸூர்யோதயமானவுடனே வாஸனையும் அழகும் நிறைந்து மலர்ந்து விளங்கும் தாமரைப் பூக்களைப் பறித்துத் தொடுத்துச் சிறிது விளம்பமானால் வாட ஆரம்பித்து விடுமே என்று பயந்தும், புதுமையும் குளிர்ச்சியும் மாறாமல் அப்பொழுதே எம்பெருபான் சாத்திக் கொள்ள வேண்டுமென்று எண்ணியும் விரைந்து திருக்கோயில் சென்று ஸமர்ப்பித்து மகிழ்வார். பரம புருஷார்த்தமாக அவர் செய்துவரும் இந்தக் [illegible]கர்யத்தினால் மிகவுந்திருவுள்ளமுகந்த எம்பெருமான் அவருக்குத் தகுந்த ஸம்பாவனை செய்தருளக் கருதித் தான் சாத்திக்கொண்ட அந்த மாலையையே தனது ப்ரஸாதமாக அர்ச்சகத்வாரா இவர் கழுத்திலணிவிப்பான். பகவத்ப்ரஸாதமாகையால் அதையவர் கழற்றாமல் அப்படியே தரித்துக்கொண்டிருப்பார். தொடுத்

ததுழாய் மலர் சூடிக்களைந்தன சூடும் தொண்டர்’ இவர்.

அன்றியும் அப்பொழுதும் ஸேவித்துக் கொண்டிருப்பதற்காகத் தனது அறையில் ஸ்ரீ ஆண்டாள் பெரியாழ்வாருடைய திருவுருப் படம் ஒன்று வைத்திருப்பாள். இப்போது அத்யுத்தமமான இந்தத் திருப்பாவை ப்ரபந்தமெழுதி முடிந்தவுடனே இதை எழுதும்படியான ஸாமர்த்யம் தனக்கு உண்டானது அவருடைய அநுக்ரஹத்தாலேயாகையால் அந்த க்ருதஜ்ஞதாவிசேஷத்தினால் அப்போது அவருக்கு ஓர் உபகாரம் செய்யக்கருதி புதிய தாமரைப் புஷ்பங்களாலாகிய குளிர்ந்த மாலையை அந்தத் திருவுருவப் படத்திற்கு ஸமர்ப்பித்து க்ருதார்த்தையாகின்றாள்.

இனி மூன்றாவதாக ப்ரபந்தஸ்வரூபத்தின் சிறப்பைக் கூறுகின்றாள்— சங்கத் தமிழ்மாலை முப்பதும் என்று குற்றங்கள் இல்லாமல் குணங்களும் அலங்காரங்களும் நிறைந்து ரஸப்ரதானமாயிருக்கும் நூல் உத்தமகாவ்யமென்பார்கள். இந்தத்திருப்பாவை ப்ரபந்தம் சங்கத்தமிழில் ஆகிய மாலை. சங்கம் என்பது மாபெரும் புலவர்களின் கூட்டம். அவர்கள் கூடி ‘கீழ்ச் சொன்ன ஸர்வாம்சங்களும் பொருந்திய தமிழ் இது’ என்றதை நிச்சயித்திருக்கின்றனரோ அந்தத்தமிழ் இதில் கையாளப்பட்டிருக்கின்றது. ஆகையால் இப்ப்ரபந்தஸ்வரூபம் மிகச் சிறந்தது. இதில் மொத்தம் முப்பது பாட்டுக்கள் இருக்கின்றன. இவற்றில் இந்தப் பாட்டு மிகவும் நன்றாக இருக்கின்றது. இது சற்று ஒருமாதிரியாக இருக்கின்றது, என்னும்படி தாரதம்யமே கிடையாது. எல்லாம் ஒரே விதமாக ரஸம் வழிந்தோடும்படி இருக்கின்றன.

இனிப் பயன் சிறப்பு. அதில் முதலில் பயனைப்பெறுகின்றவர் யார்? தருகின்றவர் யார்? என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களில் முதல்வரைக் கூறுகின்றாள்—தப்பாமே இங்கிப் பரிசுரைப்பார் என்று இப்ப்ரபந்தத்தைச் சொல்லுகின்றவர்கள், அதாவது இப் பாட்டுக்களை அநுஸந்தானம் செய்கின்றவர்கள், மேல் கூறப்போகும் பலனைப் பெறுவார்கள். இங்கு இத்தமிழ்நாட்டிலே, இப்பரிசு பாட்டுக்களை எவ்விதமாக அநுஸந்திப்பது இங்கு வழக்கமோ அல்லது எவ்விதமாக அநுஸந்திக்க முடியுமோ, அவ்விதமாக அநுஸந்திப்பவர் தப்பாமல், ஒருபாட்டையும் விடாமல்; எழுத்துப் பிழை சொற்பிழை ஒன்றும் வாராமல்; ஒரு நாளுந்தவறாமல்; ஒவ்வொரு மார்கழி மாதமும் தவறாமல்; ஆயுஸ்ஸில் ஒருநாளும் இவன் திருப்பாவை அநுஸந்திக்கவில்லை என்னும்படி ஆயுஷ் காலம் முழுவதும் தவறிப்போகாமல் அநுஸந்திப்பவர்.

இனிப்பயனைத்தருகின்றவர்—ஈரிரண்டு மால் வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்த் திருமால் ஸ்ரீராகவனைச் சொல்லுமிடமெல்லாம் கூப்பிய கைகளுடன் ஹநுமார் வந்திருப்பர் என்றபடி இத்திருப்பாவையை அநுஸந்திப்பவர் இருக்குமிடத்தில் ஸாக்ஷாத் எம்பெருமான் வந்துவிடுவான். ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் வந்துவிடுவான். கேட்டவுடன் கொடுப்பதற்காக அபரிமித செல்வத்தோடு வருவான் நான்கு புருஷார்த்தங்களில் எதை அபேக்ஷித்தாலும் கொடுப்பதற்குத் தான் ஸித்தமாயிருப்பதைக் காட்டுவதற்காக எப்பொழுதுமே நான்கு புஜங்களோடு விளங்கும் அவன் பக்தர் அநுஸந்திக்கும் திருப்பாவைப் பாசுரங்கள் காதில் விழ விழ ஆநந்தத்தினால் பூரித்துப் போவான். அவனது நான்கு தோள்களும் பெரும் பர்வதங்கள்போல் அகன்றுவிடும். செந்தாமரைக் கண் மலர்ந்து பூர்ணமாகக்கடாக்ஷிக்கும். முகம் முழுவதும் ப்ரஸந்நமாய் விகஸித்து விளங்கும். இப்படி ஆநந்தபரவசனான திருமாலால் அவர்கள் பயன் பெறுவர்.

என்ன பயன் அது? எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் ‘இனி இவர்கள் எவ்வித க்லேசமுமின்றி இன்புற்றே இருக்கும்படி செய்யவேண்டும்’ என்று நினைப்பான். இவ்வித நினைப்பே திருவருள். இதை முதலில் பெறுவார்கள். அதற்குப் பிறகு உடனே ‘இவர்களுக்கு இனி இன்பமே உண்டாகுக’ என்று ஸங்கல்பம் செய்வான். அவன் ஸத்யஸங்கல்பனாகையால் அது அப்படியே நடக்கும். இப்படி அவர்கள் அவனுடைய திருவருள் பெற்று இன்

புறுவது எங்கு எனில்; இங்கு அங்கு என்ற வரையறை அதற்கில்லை. எங்குமது பெற்று இன்புறுவர். இவ்வுலகத்தில் எங்கிருந்தாலும் பிறகு வேறு உலகம் சென்றாலும் எங்கும் இன் புறுவர். இப்ப்ரபந்தத்திற்கு விஷயமான கதை நந்தகோகுலத்தில் நடந்தது. இதைச் சொல்லும் பாஷையும் சொல்லுகின்றவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இப்படி இவற் றுக்குவரையறை உண்டாயினும் இதைச்சொல் லுபவருக்கு உண்டாகும் பலனுக்கு அதில்லை. அபரிச்சின்னமாய் சாச்வதமான பரமானந் தம் பயன் என்றதாயிற்று. புருஷார்த்தங் கள் பலவாக எண்ணப்படுகின்றனவாயினும் இன்பம் ஒன்றே முக்கியமாய் புருஷார்த்த மெனத்தகுவது. மற்றவை யாவும் இதன் பொருட்டே கோரப்படுகின்றன. அந்த இன்பம் அநுகூலபத்நீபுத்ராதி லாபத்தினாலும் அபேக்ஷித த்ரவ்ய ஸம்பத்தாலும் பகவத்பாக வத ஆசார்ய ஸேவாதிகளினாலும், நாமஸங்கீர்த் தனம் முதலியவற்றாலும், இங்கும் நிறம்பப் பெறப்படும். சரீராவஸாநத்தில் உத்தமலோ கப்ராப்தி ஸித்தமாகையால் அங்கும் பெறப்ப டும். ஆகையால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர். இப்படி இப்ப்ரபந்தத்தினால் பெறப்படும் பயன் மிகச்சிறந்தது.

திருப்பாவைக் கதையில் ப்ரபந்த வைலக்ஷண்யம்
அல்லது நூல் சிறப்பு என்கிற
எட்டாவது அதிகாரம் முற்றிற்று.

—:0:—

திருப்பாவைக் கதை முற்றிற்று.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

சுந்திரன் வந்திபற்றும் செந்தமிழ்ப் பைங்கொடி

பரமனுக்குப் பாமாலை பாடிப் பூமாலைசூடிக் கொடுத்த சுடர்ப் பூம்பொற்கொடியாகிய கோதை, பரவாஸுதேவனைப்பாலகனாகப் பாவித்த பரமபக்தராகிய பட்டர்பிரானாகிய தமப்பனால் பரமாத்மஸ்வரூபத்தையும் திவ்யதேசங்களின் பெருமையையும் அன்புடன் உபதேசிக்கப்பெற்றவளாய் அதன் பயனாக வெம்பெருமானுடைய அர்ச்சாவதாரத்தினிடத்தும், திவ்யதேசத்தினிடத்தும் மாறாத காதலுடையவளாய் அந்நிலைவாகவே இருக்கையில், நினைந்தவர் மனம் கோயில் கொள்பவனும் நெஞ்சுநிறையப்புகுபவனுமாகிய திருமாலிருஞ்சோலையெம்பெருமான் அவளுடைய ஜ்ஞான த்ருஷ்டிக்கு இலக்காகிறான். தான் மாத்திரம் தனியாக வரவில்லை. தனது திருமேனியின் பரிபூர்ண ஸௌந்தர்யத்துடனும் பூஷண ஆயுதங்களுடனும் வரை புரை திருமார்பில் திருமாமகளுடனும், தான் உறையும் அச்சோலைமலையுடனும், அம்மலையிலுள்ள ஸகல ஸ்தாவர ஜங்கமங்களுடனும் தோன்றுகிறான். எல்லாவற்றையுமேக காலத்தில் எதிரே ஸாக்ஷாத்தாக நங்கோதைப் பிராட்டி காண்கிறாள். தனது அஸாதாரணமான பரத்வமும், அஸத்ருசமான ஸௌந்தர்யமும், அநிதரஸாதாரணமான வைபவங்களும், தேவீ பூஷண ஆயுதங்களும் தோன்ற முறுவல் செய்து நிற்கும் அழகனான எம்பெருமானைக்கண்ட கோதை தன் வசமிழந்தாள். அத்துடன் திடீரென அவ்வெம்பெருமான் அருகில் வந்து வளையல்களணிந்த அவளுடைய கையை வலியப் பற்றுகிறான். ஆஹா! அவளது கையைச் சுற்றிப் பற்றியிருக்கும் பரமனது கைக்கும் அவளுடைய மணிக்கட்டிற்குந் தான் எவ்வளவு பொருத்தம்? கையைப்பற்றியது மாத்திரமல்ல; முன்பு ருக்மணிப் பிராட்டியை வலியப்பிடித்திழுத்துத் தேரேற்றியதுபோல் பற்றியிழுக்கிறான். அந்த நிலையிலும் கோதையின் வளையல்கள் கையைவிட்டு நழுவுகின்றன. ஏன்? பரமன் அருகே நிற்கவும் இது நேரலாமோ என்று தோன்கிறதல்லவா? காரணம் வேறொன்றுமில்லை. மணாளன் பற்றியிழுப்பதனாலும் வளை நழுவலாம். இவன் திருமங்கை முதலியோரை நினைத்துக்கொண்டு திடீரென்று போய்விட்டால் என்செய்வது என்று தோன்றும் அஸ்தானே பயத்தினாலும் நழுவலாமல்லவா? புன்முறுவலுடன் எதிரே நிற்கும் எம்பெருமானை நோக்கக் கூச்சமுற்றுப்பக்கங்களில் நோக்குகிறாள். அங்கே நோக்கினாலும் அங்கங்கே காணப்படும் கருநெய்தல் புஷ்பங்களும், காயாபூம்க்களும் திருமாலின் திருமேனி நிறம், அழகு, மார்த்தவம், குளிர்ச்சி, மென்மை முதலியவற்றையே காட்டுகின்றன. மெல்லிய அப் பூக்களை நோக்கி அம் மெல்லியலாளும் ஒன்று கேட்கிறாள். அதாவது திருமகளால் விரும்பப்படும் அழகே வடிவமான இவ்வெம்பெருமான் தன்னை வலியப் பிடித்திழுக்கிறானே, இவன் ஒருபொழுதும் நீங்காமல் தன்னுடன் இருப்பானோ, இனி தனக்கு யாதொரு துயரமுமிராதோ என்று உள் பொருள்படும்படியும் அது எம்பெருமான் மனத்தில் படும்படியும் அப்பூக்களை நோக்கிக் கேட்கிறாள். மஹாஜ்ஞாநியாகிய ஸ்ரீ ஆண்டாள் இப்படி அஃறிணைப் பொருள்களிடம் பேசுதல் கூடுமோ என்று வினா வெழுதல் கூடும். இது ஸ்ரீ ஆண்டாள் தானான தன்மையில் கூறியதல்லவே. எம்பெருமானிடங் கொண்ட எல்லையற்ற காதலினாலல்லவா கேட்கிறாள். ஆதலின் 'கேட்குளபோலவும் கிளக்குளபோலவும் இயற்றுளபோலவும் இயங்குனபோலவும் அஃறிணை மருங்கினும் அறையப்படுமே' என்ற விதிப்படி அன்னிலையில் கேட்கத் தகுமென்றே கொள்ளல் வேண்டும்.

'திருமகளுடன் சேர்ந்தவனும் திருமங்கையினிடம் வ்யாமோஹத்தையுடையவனும் திருமங்கையின் வ்யாமோஹத்திற்கு ஓர் காரணமாயிருப்பவனும், அழகியதான ஓர் மயக்கத்தை யுண்டுபண்ணுகிறவனுமாகிய பரமபுருஷனுடைய திருவுருவத்தையும் அழகையும் ப்ரகாசத்தையும், அவன்விஷயமான ஜ்ஞாநத்தை

யும் காட்டி அதனாலே காண்பவரது உள்ளத்தினுள்ளேயும் தத்விஷயமான ஜ்ஞாநத்தை விளைவிக்கவல்ல கருநெய்தல் மலர்களே! என்றும் வாடாத காயாம்பூக்களே! நான் உய்ந்துபோகும் வழியொன்றைச் சொல்வீர்' என்று கேட்கிறாள். திருமாலின் உருவத்தையும் அழகையும் நிறத்தையும் காட்டி அவன் விஷயமான ஜ்ஞாநத்தையுண்டுபண்ணவல்லவைகளாக இருப்பதினாலே உய்யும் வகையையும் சொல்லக் கூடுமென்று எண்ணிக் கேட்கிறாள். அதைக் கேட்டு அப்பரமனும் தன்னைப்பிரியாது என்றும் மனம் பொருந்தியிருக்கட்டுமென்றுமெண்ணிக்கேட்கிறாள். அவை அதைக்கேட்டு மறுமொழி பேசாதிருக்க 'அவைகளைப் பார்த்த கோதை 'நிறமுதலியவற்றில் எம்பெருமானை அநுகரிக்கும் நீங்கள் எனக்கு ஓர் மறுமொழி கொடுக்கமாட்டீரோ? அப்படியிருத்தல் நீதியோ' என்றும் கேட்கிறாள். அப்போது அப்பூக்கள் அவளைநோக்கி உனக்கு நாங்கள் செய்யவேண்டுவதென்னவென்று கேட்பதுபோலும் தோன்றுகிறது. இங்கு ஒரு வார்த்தை. பூக்கள் கோதையிடம் பேசியதாக எந்தப்பாசுரத்தில் கோதை எங்கே சொல்லியிருக்கிறாள் என்று கேட்கக்கூடாது. அவை கேட்டதாகத் தான் கொள்ளவேண்டியிருக்கிறது. தயாரூபியும் பூமிதேவியின் அம்சமுமான கோதாதேவியுடனே அவை பேசியேயிருக்கும். அவளவையனைத்தினுக்கும் தாயல்லவோ? அப்படியவை பேசாதிருப்பினும் அவளுடைய சொல்லமுதைக் கேட்டுக்கொண்டு எதிரே நிற்பவனும் ஸர்வாந்தர்யாமியுமாகிய ஸுந்திரன் அப்பூக்களுக்குள்ளே புகுந்துகொண்டு அவைகளை கேட்பதுபோல் கேட்டிருக்கவும் கூடும். அக்கேள்வி கேட்கப்பட்டவுடன் உரைக்கிறாள் கோதை. 'அழகு நர்த்தனம் செய்வதும், அழகுக்கு உற்பத்திஸ்தானமும், ஸௌந்தர்யம் உல்லாஸமாக உலவும் ஸ்தானமும், க்ஷீராப்தியைக்காட்டிலும் பெருமையும் விசாலமும் பொருந்தி, தாமரைப் புஷ்பத்தைக்காட்டிலும் அழகு மார்த்தவம் இயற்கைமணம் முதலியன நிறைந்திருப்பதனால் திருமகளால் மிக விரும்பிப் பரமானந்தத்துடன் விஹரிக்க ஏற்ற இடமுமாகிய வலிய பருத்த தோள்களையுடைய திருமாலிருஞ்சோலையிலுறையும் அவாப்தஸமஸ்தகாமனாகிய எம்பெருமான் தனது கையில் பாஞ்சசன்னியத்தை ஸ்வாதீனமாகப் பற்றுதல்போல எனது கையையும் ஸ்வாதீனமாக வலியப் பற்றியிருக்கிறானே, இவ்வழக்கம் எங்காவது உண்டா? வேறு எவருக்குமில்லாவிடினும் இவ்வெம்பெருமானுக்கு இவ் வழக்கம் இதற்கு முன் எப்பொழுதும் உண்டா? அப்படி இருந்தாலும் இவ்வழக்கம் இதற்கு முன் என்றாவது என்னிடம் இவனால் அநுஷ்டிக்கப்பட்டதுண்டா? இதற்கு முன்பு இவ்வழக்கம் இல்லையென்றாலின்று திடீரென்று இப்படிச் செய்யத் துணிந்த துணிவு இனி என்றும் நீடித்திருக்குமென்பது என்ன நிச்சயம்? பற்றத்துணிந்த மாதிரி விடவும் துணியலாமே? இவ்வழக்கம் நியாயமானதுதானோ? மேலும் என்றுமே அவருக்கு இதே வழக்கம் உண்டெனில், அப்படியெல்லோரையும்போலத்தானே என்னையும் நினைத்திருப்பார்? அவர்களைவிட்டு இன்று என்னைப் பற்றியதுபோல என்னையும் விட்டுவிட்டு இனி இன்னொருவரைப் பற்ற நினைத்து ஓடினாலும் ஓடிவிடக்கூடுமன்றோ? அப்படி அவர் செய்பவரல்லரென்பது என்ன நிச்சயம்? தனது திருமார்பிலும் தோளிலும் என்றும் நீங்காத வ்யாமோஹத்துடனும் நம்பிக்கையுடனும் பெரிய பிராட்டியார் விளையாடிக்கொண்டிருக்கும்போதே வலியப் புகுந்து என் கையைப் பற்றுகிற விடபுருஷர் யாது செய்யமாட்டார்?' என்று கேட்கிறாள். அப்போது அப்பூக்கள் 'அவர் உன்னை வலியப் பிடித்தால் நீ ஏன் பிடிபட்டு நிற்கவேண்டும்? நீ உன் வழியே எங்காவது சென்றுவிடலாமே' என்று கேட்கின்றன. அதற்கு கோதை, 'ஆஹா! என்மீது தவறா? அழகு சுழித்து வெள்ளமிட்டு விளையாடியோடும் அந்தத்திருத் தோள்களில் மயங்கியன்றோ வசமிழந்து நின்றேன். அது என்பேரில் எப்படித் தவறாகக் கூடும்? தன் கைச் சங்கைப் பற்றுவதுபோல் அவர் என் கையைப் பற்றும்போது என் கையில் நான் அணிந்த வளையல்கள் எப்படி என் அலங்காரத்துக்குத் தாங்கள் அடிமை பூண்டு

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபிலமடம் 34-வது பட்டம் 43-வது பட்டம்

ஸ்ரீ அழகியசிங்கர்களின் திருநக்ஷத்ரங்கள்

அடியேன் திருவள்ளூரில் 42 வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனம் பெற்று க்ரந்த காலக்ஷேபத்திற்காக ஸ்ரீமதழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீக்ராமமான தேவனூர்விளாகத்தில் ஜாகையுடன் கிட்டத்தட்ட 1 வருஷகாலமிருந்து காலக்ஷேபங்களை பூர்த்தி செய்து கொண்டு வந்தேன். அந்த காலத்தில் ஸ்ரீ அழகியசிங்கரின் குடும்ப கதைகளை அவ்விடமுள்ள பெரியோர்களின் மூலம் தெரிந்துகொள்ள சந்தர்ப்பமேற்பட்டது. அதில் ப்ரக்ருதமுபயுக்தமானதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அநேகமாக ஆஸ்திகவைதிக குடும்பங்களில் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும்போது ஒவ்வொரு நிமித்தத்தை அவலம்பித்து வைப்பது வழக்கம். ஸ்ரீரங்கத்தில் பிறந்தபடி.பால் ரங்கனாதனென்று வைக்கப்பட்டதென்ற ரீதியில் இருக்கும். நம் ஸ்ரீஅழகியசிங்கர் அவதார காலத்தில் ஆஸ்தானத்தில் ஒருவரும் மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளி யிருக்கவில்லை. ரிஸீவர் நிர்வாகத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹபுரத்தில் பெருமாள் எழுந்தருளியிருந்து ஆராதனம் ததீயாராதனம்நடந்துவந்தகாலம். ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருத்தகப்பனாரும் குடும்பத்தாரும் நாஸிம்ஹபுரம்போய் பெருமாளை ஸேவித்துவருவது வழக்கமாம். ஸ்ரீஸந்நிதியில் திருநக்ஷத்திரம் முதலிய விசேஷங்களுக்கு பள்ளயம் (மாலை ப்ரஸாதம் கொண்டு கொடுத்து,

---

கையில் தங்கிநிற்குமோ அப்படியல்லவா அவர் நானிட்ட வழக்காய் நிற்பதுபோல் நிற்கிறார். எனது கைக்கே ஓர் அலங்காரமளிக்கும் வளையல்களைப்போலல்லவா இருக்கிறது அவரது பிடி. இவைகளில் நான் மயங்கி நிற்பது என் மேல் தவறாகுமோ?' என்கிறாள். அதற்கந்த புஷ்பங்கள் 'நீயும் அவனிடம் மயங்கி நின்றாய்; அவரும் உன்னிடம் மயங்கியே தன் திருமார்பில் திருமகளிருக்கவும் உன்னை விரும்பியே கைப்பற்றி நின்றார். எதை நாங்கள் தவறு என்று சொல்வது' என்கின்றன. அவ்வளவில் அவைகளைப் பார்த்த கோதை 'நீங்கள் திருமாலினது உருவத்தையும் அழகையும் நிறத்தையும் மாத்திரம் கொண்டிருக்கவில்லை. அவரது அறிவையும் சாதுர்யத்தையும் கூடப் பெற்றிருக்கிறீர்கள்' என்று வாழ்த்துகிறாள். இவ்வநுபவத்தை ஓர் தண்டமிழ் அமுதப் பாசுரமாக்கித் தருகிறாள் கோதைப்பிராட்டி.

அப்பாசுரம் வருமாறு:—

'கருவிளையொண்மலர்காள் காயாமலர்காள் திருமால்
உருவொளி காட்டுகின்றீர் எனக்குய் வழக்கொன்றுரையீர்
திருவிளையாடுதிண்டோள் திருமாலிருஞ்சோலை நம்பி
வரிவளையில் புகுந்து வந்தி பற்றும் வழக்குளதே'

குறிப்பு:— கருவளையொண்மலர் – ஒளியும் அழகுமுள்ள கருநெய்தல் புஷ்பம், கருவிளை— (கரு - உள்ளே) உள்ளேவிளைகிற, விளைக்கிற; ஒண்மை— அறிவு; காயாமலர்— காயாம்பூ, வாடாத மலர்; திருமால்— ச்ரிய:பதி, லக்ஷ்மியிடம் வ்யாமோஹமுள்ளவன், லக்ஷ்மியின் வ்யாமோஹத்துக்குக் காரணமானவன், விலக்ஷணமான வ்யாமோஹத்தைக்கொடுப்பவன்; ஒளி— ப்ரகாசம், அறிவு; உய் வழக்கு— உய்யும் வழி; ஒன்று— அத்விதீயம்; உரையீர்— உரைப்பீர், சொல்லுங்கள், உரைக்கமாட்டீரோ; திரு- அழகு, திருமகள்; திருவிளையாடு- லக்ஷ்மி விளையாடுகிற, அழகு உற்பத்தியாகிற. அழகு ஸஞ்சரிக்கிற; திண்— வலிய; நம்பி- பரிபூர்ணன்; வரிவளையில்— பாஞ்சசன்னியத்தில், பாஞ்சசன்னியம்போலே, என் கைவளை போலே, என் கைவளையிலே; புகுந்து— தானே முன்வந்து; வந்திபற்றுதல்- வலிந்து பற்றுகை; உளதே- உள்ளதோ, இதோ உள்ளதே.

வரவேணுமென்றும் உத்ஸவத்தை நடத்தவேணுமென்று கோவில் துரையார் வந்து சொல்வதற்கு, பள்ளயம் கொண்டுவந்தார்களென்று சொல்லுவது கோவில் வழக்கச்சொல்.) கொண்டுவருவார்களாம். அம்மாதிரி ஸ்ரீ அழகியசிங்கர் அவதரித்த பிலவ ௵ கார்த்திகை மீ த்தில் ஸ்ரீஸந்நிதி பரிசாரகர் தையார் ஸ்ரீ அம்மாளாச்சார் பள்ளயம் கொண்டு வைத்து நாளை மறுதினம் (நாளன்னிக்கு) ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்திரம்; அவசியம் ஏளவேணுமென்று ப்ரார்த்தித்தாராம்.

திருத்தகப்பனாருக்கு ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரிடம் பஞ்சஸம்ஸ்காரம். அத்துடன் ஸ்ரீரங்கம்மா என்கிற தன்னுடைய ஸ்வீகார தாயாருடன் ஸமாச்ரயணத்துக்காக தன்னுடைய 10 வயதில் போனபோது ஷை ஸ்ரீரங்கம்மாள் ஸ்ரீ வீரராகவவேதாந்த யதீந்த்ர மஹாதேசிகனின் பூர்வாச்ரமபுத்ரி என்கிற கௌரவத்தால் நாலுதரம் ஸேவித்ததும் ஆசார்யகுமாரத்தி போருமென்று ஸாதிக்கும்படியாயிருக்குமாம். அந்த அபிமானத்தினால் பஞ்சஸம்ஸ்காரம் செய்தானதும் இவனை நாம் ஜ்ஞாநபுத்ரனாக ஸ்வீகரித்துக்கொண்டோம். பூர்வாச்ரமத்தில் வேறு புத்ரர்களில்லாதபடியால் இவனுடைய கல்யாணத்தையும் இந்த வருஷமே இவ்விடத்திலேயே செய்யென்று நியமித்து அப்போது காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருந்த சக்ரவர்த்தி ராமாநுஜாச்சாரியாரை (30 வது பட்டம் ஸ்ரீநிவாஸவேதாந்த மஹாதேசிகன் பூர்வாச்ரமகுமாரரை) அழைத்தும்முடைய பெண்ணை இவனுக்குக் கொடும். இந்த ஊரிலேயே கல்யாணம் பண்ணுமென்று நியமித்தாயிற்றும். அந்த நியமனப்படியே தன்னுடைய 6 வயதுப் பெண்ணை திருவள்ளூரிலேயே ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தின்பேரிலேயே கல்யாணம் பண்ணிக்கொடுத்தாராம். ஆகையால் அவளிடம் ஜனித்தவனுக்கு வீரராகவனென்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறதாம். அதனாலேயே பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் ஆராதித்துவந்த ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் பாதுகைகளை தான் பரந்யாஸம் செய்து கொள்ளும்போது தனக்கு ஆராத்யமாகக் கொடுக்கப்பட்டதாம். இதுமுதலான விசேஷகாரணங்களால் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்திரத்திற்குப் போய்விட்டு வருவது வழக்கமாம்.

பள்ளயம் கொண்டுவந்த ஸன்னிதி பரிசாரகர் அம்மாளாச்சாரிடம் ஆத்தில் ஆஸந்நப்ரஸவையாயிருக்கிறபடியால் ப்ரஸவமாகாமலிருந்தால் வரக்கூடுமென்று திருத்தகப்பனார் ஸாதித்தாராம். அதற்கு அவர் புருஷப்ராஜையாக பிறக்கப்போகிறது. பெருமாள் திருநாமத்தை வைக்கவேணுமென்று சொல்லிப் போய்விட்டாராம். அவர் சொன்னபடி மறுநாளே பூராடத்தில் நம் ஸ்ரீ அழகியசிங்கர் அவதரித்தாராம். அதனாலேயே லக்ஷ்மீந்ருஸிம்ஹன் என்று பெருமாள் திருநாமம் வைக்கப்பட்டதாம், 1. அந்த அத்திப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கர் கோத்ரத்திலேயே அந்த ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்ணாநுக்ரஹம் பெற்ற திருத்தகப்பனாரால் பெற்றுப் பெயரிடப்பட்டு வளர்க்கப்பட்டு ஹிதப்ரவர்த்தனம் பண்ணப்பட்டவராயும், 2. அந்த ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹம் பெற்றவராயும் நாற்பது பட்டம் வரையில்லாதபடி பெருமாள் பெயரையே கொண்டவராயும் 41 வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கருடைய ப்ரஸாதத்தால் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனிடத்தில் ந்யஸ்தபரராயும், 3. அந்த அத்திப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கர் கோத்ரோத்பவராயும் அந்த திருநக்ஷத்திரத்திலேயே அவதரித்தவருமான 42 வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரால் ஆஸ்தானத்தில் அபிஷிக்தராயும், எழுந்தருளியிருப்பதை பராமர்சித்தால் **'जायमानं हि पुरुषं यं पश्येन्मधुसूदनः'** என்கிறபடி ஆதிமுதல் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்தின் வைசித்ரிய ம்நம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் இருப்பது நமக்கு நன்றாகத்தெரிகிறது. தவிர 34 என்கிற எண்ணிற்கும் அதையே திருப்பி வாசித்தால் 43 என்கிற எண்ணிக்கை வருவதற்கும், 43 என்பதைத் திருப்பிவாசித்தால் மறுநாள் 34 ஆனதற்கு ஒருசேர்தியிருப்பதையும்குறிப்பிட ஒரு பொருத்தமுண்டு.

இதையொட்டியே எந்த கார்யங்களையும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனைப்போதைக்கப் போது ஹ்ருதிஸ்திதனாய் நியமித்து வருவதாகவும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்துவரும்படியிருக்கிறதென்று நமக்குத்தெரியவருகிறது.

ஆகவே இந்த வருஷத்தில் முதல் நாள் நம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்திரமும் மறுநாள் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்திரமும் வெகு விமரிசையாய் நடந்தது. இவ்வருஷம் பூராடதினத்தன்றே உத்திராட திருநக்ஷத்திரம் வந்ததும் ஒரு விசேஷம்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

मूलमन्त्रसिद्धनामार्चना

ओं श्रीमते स्वभावसिद्धरक्षकाय नमः
सर्वरक्षकाय नमः
रक्ष्यवस्त्वनुरूपनानाप्रकाररक्षकाय नमः
सर्वदा रक्षकाय नमः
सर्वत्र रक्षकाय नमः
सर्वप्रकाररक्षकाय नमः
स्वार्थरक्षकाय नमः
सर्वज्ञाय नमः
सर्वशक्तये नमः
अनिवार्याय नमः 10
अनतिक्रमणीयरक्षणसंरंभाय नमः
परमकारुणिकाय नमः
अवसरप्रतीक्षाय नमः
व्याजमात्रसापेक्षाय नमः
आश्रितसुलभाय नमः
विश्वसनीयाय नमः
* सापराधघटनाद्यनुगुणविशेषणवते नमः
निरुपाधिकशेषिणे नमः
नित्यशेषिणे नमः
सर्वशेषिणे नमः 20
अनन्यशेषिणे नमः
गुणकृतशेषिणे नमः
सपत्नीकशेषिणे नमः
समाभ्यधिकरहिताय नमः
आत्महविरुद्देशार्हाय नमः
अचिद्बद्धमुक्तनित्यविलक्षणाय नमः
* परशेषित्वहेतवे नमः
ओं श्रीमते स्वतः कर्त्रे नमः

ओं श्रीमते शक्त्याधायकाय नमः
प्रेरकाय नमः 30
अनन्यप्रेर्याय नमः
अनुमन्त्रे नमः
कर्मसाक्षिणे नमः
सहकारिणे नम
प्रियप्रवर्तकाय नमः
* हितप्रवर्तकाय नमः
निरुपाधिकनन्तव्याय नमः
वशीकार्याय नमः
सिद्धोपायाय नमः
साध्योपायहेतवे नमः 40
श्रुतिस्मृतिरूपाज्ञावते नमः
दण्डधराय नमः
सर्वसमाय नमः
* आश्रितपक्षपातिने नमः
अविद्यादिहेतवे नमः
अविद्याद्यनर्हाय नमः
* आश्रिताविद्यादिनिवर्तकाय नमः
स्वरूपान्यथाभावरहिताय नमः
स्वभावान्यथाभावरहिताय नमः
सर्वनेत्रे नमः 50
* सर्वजगद्व्यापारलीलाय नमः
सर्ववेदान्तप्रतिपाद्याय नमः
सर्वोपादानाय नमः
सर्वनिमित्ताय नमः
सत्यसङ्कल्पाय नमः
ओं श्रीमते सर्वशरीरिणे नमः

ओं श्रीमते सर्वशब्दवाच्याय नमः
सर्वकर्मसमाराध्याय नमः
सर्वफलप्रदाय नमः
सर्वविधबन्धवे नमः 60
सर्वव्यापकाय नमः
निरतिशयसूक्ष्माय नमः
सर्वाधाराय नमः
स्वनिष्ठाय नमः
सत्याय नमः
ज्ञानाय नमः
अनन्ताय नमः
आनन्दाय नमः
अमलाय नमः
अनन्तगुणाय नमः 70
नित्यदिव्यमङ्गळविग्रहाय नमः
परव्यूहाद्यवस्थावते नमः
सत्यावताराय नमः
अजहत्स्वस्वभावावताराय नमः
अप्राकृतावताराय नमः
अकर्मवश्यावताराय नमः
अकालनियमावताराय नमः
आश्रितार्थगुणपरीवाहावताराय नमः
सर्वावस्थशुभाश्रयाय नमः
सर्वावस्थलक्ष्मीसहचराय नमः 80
दिव्यभूषणायुधमहिषीस्थानपरिजन-
* परिच्छदद्वारपालपार्षदादिमते नमः
स्थूलशरीरविश्लेषकाय नमः
ओं श्रीमते विश्रमस्थानाय नमः

ओं श्रीमते अनुग्रहविशेषवते नमः
ब्रह्मनाडीद्वारप्रकाशकाय नमः
ब्रह्मनाडीद्वारप्रवेशकाय नमः
ब्रह्मरन्ध्रोत्क्रान्तिहेतवे नमः
अर्चिराद्यातिवाहिकनियोक्त्रे नमः
सूर्यद्वारादिनेत्रे नमः
अण्डावरणप्रकृतिमण्डलातिक्रमहेतवे नमः 90
विरजातीरप्रापकाय नमः
सूक्ष्मशरीरविश्लेषकाय नमः
अप्राकृतदेहप्रदाय नमः
दिव्याप्सरस्सत्कारादिप्रयोजकाय नमः
ब्रह्मगन्धादिप्रवेशकाय नमः
नित्यमुक्तसत्कारविशेषहेतवे नमः
पर्यङ्काधिरोहणपर्यन्तादरवते नमः
परिपूर्णानुभवहेतवे नमः
प्रधानप्राप्याय नमः
सर्वविधकैङ्कर्यप्रतिसंबन्धिने नमः 100
अवाप्तसमस्तकामाय नमः
निरतिशयानन्दवते नमः
निरतिशयभोग्याय नमः
सर्वप्रकारभोग्याय नमः
सर्वदानुकूलस्वभावाय नमः
अत्यन्ततुल्यभोगप्रदाय नमः
आश्रितविश्लेषासहाय नमः
* अपुनरावृत्तिहेतवे नमः 108
ओं श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः
भक्ताभीष्टफलप्रदस्वामिने नमः
सर्वस्वामिने नमः

குறிப்பு:— த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி நாமார்ச்சனை முதன்முதலில் ஸ்ரீ. உப. தேவனார்விளாகம் ஸ்வாமியால் ஆரம்பிக்கப்பட்டது ஸமீபத்தில் தனிப் புஸ்தகமாக அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. அதுபோல் இதுவும் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தினால் தொகுக்கப்பட்டது.

19953